பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி கேசவர்த்தினியைக்கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க்கட்டையையும் மாற்றமுடியாது. ஆனல் கூந்தலையோ வித விதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர், கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினல் முக அழகையும், கேசவர்த்தினியினல் கூந்தலையும் அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலை காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணு 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாதுகெடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைஞுபஜார் ரோடு, மதராஸ்.
கோயமுத்தூர்: ஏஜண்டு, மூர்த்தி பிரதர்ஸ் 272, சுக்ரவார் பேட்டை

Dr. Paul's Pure Lotus Honey

The Infallible Medicine for Cataract Glaucoma, Ophthalmia, Ulcers of Eyes, and all other eye diseases. Acts like Magic. Money back in case of failure. Price Two Dram Phial Rs. 2. V. P. Extra.

S. PAUL & CO., (Dept. S. W.)
4, Hospital Street, Dharamtola, CALCUTTA



மாயா பானர்ஜி சொல்லுகிருள்

"லக்ஸ் டாய்லெட் சோப்பைவிட அதிக அழகு அளிக்கக்கூடிய சோப் வேறே காணமுடியாது"



அவள் கவர்ச்சியுள்ளவளாய் இருக்கிருள்—அல்லவா? இப்பேர்ப்பட்ட அழகிய சினிமா நக்ஷத்திரம் தன் சருமத்தின் ஆரோக்யத்திற்கும், அழகிற்கும், அதிக பணச் சிலவாகும் ஓர் முறையை அநுசரிப்பாள் என்று எண்ணுவீர்கள். ஆனல், அப்படியில்லை! எளிதான லக்ஸ் டாய்லெட் சோப் முறைதான் மிகவும் உயர்ந்தது என்று மாயா காண்கிருள். "இந்த மிருதுவான வெண்ணிற சோப் சருமத்தைப் பாதுகார்க்கும் வகை மிகவும் ஆச்சரியமானது" என்கிருள்.

LTS. 71-172 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

"எப்பொழுதும் உபயோகியுங்கள்"



வாசு சங்கு
மார்க்
பட்டணம்பொடி

உலக மெங்கும் புகழ்பெற்றது

வாசு பூபேந்தரநாத் & கோ.
மதராஸ் பெஜவாடா.

டோங்ரே
பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு

விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

ஆயிரக்கணக்கான பேர்கள் இன்று இதை சொல்லுகிருர்கள்!

"எனக்கு குழந்தைப் பருவத்தில் குலைக்கட்டி நோய் கண்டு, தேய் வீகத்தன்மையால் அல்லது, பிழைப்பது துர்லபம் என்ற நிலைமை ஏற்பட்டது. அதனை குணப்படுத்தி என் உயிரையும் காப்பாற்றியது தான் இந்த அற்புதமான ஜம்மியின் லிவர்க்யூர்"

குழந்தைகளின் குடல், ஈரல், குலைக்கட்டி முதலிய வியாதிகளை குணப்படுத்தும் 'மேன்மையான' கை கண்டதுமான இதை அற்புத நிவாரணி' என்று உயர்ந்த வைத்தியர்கள் கூறுகிருர்கள்.

ஜம்மியின்
லிவர்க்யூர்

எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன.

ஜம்மி வெங்கடரமணய்யா அண்டு சன்ஸ்,
மைலாபூர் — மதராஸ்.
சப் ஆபீஸ்: கும்பகோணம். பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னே, பம்பாய், பெங்களூர், திருச்சினுப்பள்ளி, விஜயநகரம்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரேசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
ஜி. டி., மதராஸ்.

Printed and Published by T. S. Visvanatha Iyer B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras, Editor, C. R. Srinivasan B.A.

சுதேசமித்திரன்

Vol. 14 No 5 7-3-43 வாரப்பதிப்பு Price 2 Annas

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு 7 - 3 - '43

சென்ற வார நிகழ்ச்சிகள்

சோதனையிலிருந்து மீட்சி

★

வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ் பட்டு நின்று தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!

தமிழ் நாட்டுக் கவியரசர் ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியார் பாரதத்தாயின் அருந்தவப் புதல்வரான மகாத்மாவை வாழ்த்தி மேற்சொன்ன பாமாலையை சூட்டினார். அப்பாமாலையின் மணம் இப்போது உலகமெங்கும் கமழும் வண்ணம் மகாத்மா தமது உபவாசத்தை முடித்து வெற்றிபெற்றுவிட்டார். இச்சோதனையிலிருந்து அவர் மீட்சிபெற வேண்டுமே யென்று உள்ளம் பதறியவர்கள் எண்ணிலர். உபவாசம் முடிந்த செய்திகேட்டு உலகம் உவகை பூத்து நிற்கிறது. தலைவர்கள் சிறைப்பட்டவுடன் நாட்டில் நிகழ்ந்த அராஜகச் செயல்களுக்கு மகாத்மாவும், காங்கிரஸும் காரணமெனச் சர்க்கார் பழி சுமத்தினர். "அங்ஙனம் சொல்வது சரியல்ல; தக்க காரணங்களைச் சொல்லி என்னைத் திருப்தி படுத்துங்கள்" என்றார் மகாத்மா. நாட்டிலுள்ள நிலையை ஆராய்ந்து நலனுறச் செய்வதற்கான மார்க்கங்களைப் பரிசீலனை செய்யச் சந்தர்ப்பமளிக்க வேண்டினார் காந்திஜீ. இக்கோரிக்கையிலுள்ள நியாயத்தை மராமம்பழ இந்திய சர்க்காரோ அல்லது பிரிட்டிஷ்சர்க்காரோ உணரவில்லை. 40கோடி மக்களின் ஒருமித்த கோரிக்கையை உதறித்தள்ளிவிட்டார்கள். ஆனால் மகாத்மா தமது நோக்கத்தை இந்த உபவாசத்தின் மூலம் பூர்த்தி செய்து கொண்டு விட்டார்காந்திஜி உயிர்வாழ்வது உலகத்துக்கே ஒரு பெரிய பலம். அவரது சொல்லும் செயலும் உலகம் உய்வதற்காகவேயாகும். அவரது நியாயமான வேண்டுகோளுக்கு இணங்கி நடந்து இந்திய–பிரிட்டிஷ் உறவை என்றென்றைக்கும் சுமுகமாகச் செய்து கொள்வதற்கு ஒப்பற்ற சந்தர்ப்பம் சர்க்காருக்குக்கிடைத்தது. வைஸ்ராயும், சர்ச்சிலும் இதை உணராமல் நடந்துகொண்டனர் என்றே வருங்கால சரித்திராசிரியர்கள் கூறுவர்.

ஆண்டவனருளால் சோதனையிலிருந்து மீட்சி பெற்ற காந்திஜீ நீடூழி வாழ்க!

உபவாஸம் முடிந்த விவரம்

சென்ற 3-ந் தேதி காலை 9-மணிக்கு மகாத்மாஜி தமது 21-தின உபவாஸத்தை முடித்துக் கொண்டார். உபவாஸம் முடியுமுன்பாக ஆகாகான் அரண்மனையிலுள்ள பாதுகாப்புக் கைதிகளின் பிரார்த்தனை நடந்தது. அவர்கள் பக்தி ரஸப் பாடல்கள் பாடினர். இவ் வைபவம் எளிய முறையில் நடந்தது. பின்னர் காந்திஜீயிடம் ஸ்ரீமதி கஸ்தூரிபாய்,கண்ணாடி டம்ளரில் ஆரஞ்சுப் பழ ரஸத்தைக் கொடுத்தார். மகாத்மா மௌனமாகப் பிரார்த்தனை செய்த பிறகு மெதுவாக அப்பழரஸத்தை அருந்தினார். புனா ரயில்வே ஸ்டேஷனுக்கருகே நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் ஸ்ரீமான் எம். எஸ். ஆனேயும் மற்றவர்களும் கலந்துகொண்டனர்.

இந்திய சர்க்கார் வரவு, செலவு திட்டம்

இந்தியா சட்ட சபை சென்ற மாதம் 27-ந் தேதி கூடியபோது சர்க்கார் பொக்கிஷ மெம்பர் 1943-44ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

நடை முதல் வருஷத்துக்கு 94.66 கோடி ரூபாய் துண்டு விழுந்திருப்பதாகவும், அடுத்த வருஷத்தில் (1943-44) 60.28 கோடி ரூபாய் துண்டு விழுமென்றும் அவர் கூறினார்

ரூ. 60.28 கோடி துண்டு விழுவதில் 20.1 கோடி கிடைக்கும்படி புதிய வரிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். பாக்கி தொகை கடன் வாங்குவதன் மூலம் ஈடு செய்யப்படும்.

புதிய வரிகளின் விவரம் பின் வருமாறு:—

(1) வருஷமொன்றுக்கு 5000 ரூபாய்க்கு மேலான வருமானங்களின் வரிகளுக்கு மத்திய ஸர்சார்ஜ். இது வருமான வரியின் அடிப்படையான விகிதங்களுக்கு மேல் ஒரே ரீதியில் 100க்கு 66-2/3 வீதம் ஆகிறது.

(2) 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் 3½ லக்ஷம் வரையில் உள்ள வருமானங்களுக்கான சூபர் வரியில், ஒரே ரீதியாக அரையணா உயர்வு.

(3) கார்ப்பொரேஷன் வரி ரூபாய்க்கு 2 அணா வீதம் உயர்வு; மொத்தம் வருமானம் 7 கோடி ரூபாய்.

(4) மறைமுகமான வரி விதிப்பு இனங்களில் புகையிலையும், வெஜிடபிள் உற்பத்திச் சரக்குகளும் சேரும்; இவற்றிற்கு எதிர் வரி உண்டு.

புகையிலையைப் பயிரிடுபவர்களின் சொந்த உபயோகத்துக்காகவும் அல்லது அவர்களது வீட்டு உபயோகத்துக்காகவும் பயிரிடப்படும் புகையிலைக்கு எதிர் வரி கிடையாது.

(5) தபால், டெலிபோன் கட்டணங்களில் மேலும் உயர்வு.

இந்தியாவில் புகையிலை ஏராளமாக உபயோகிக்கப்படுகிறது. ஆனால் இதன் இறக்குமதிகள் பேரில் நெடுநாளாகச் சுங்க வரி விதிக்கப்பட்டு வருகிறதாயினும் உள் நாட்டுச் சரக்குக்கு வரி விதிக்கும் பிரச்னை தீர்க்கப்படாமலேயே இருந்திருக்கிறது. புகையிலை வரி விதிக்கப்படக்கூடிய சரக்கு என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது வாழ்க்கைக்கு வேண்டிய அத்யாவசியமான சரக்கல்ல; அதை எல்லோரும் உபயோகிக்கிறார்கள்; உலகில் நாகரிகம் முதிர்ந்த எல்லா நாடுகளிலும் அதற்கு வரி உண்டு; அதன் மூலம், நல்ல வருமானம் கிடைப்பது அனுபவத்தில் கண்கூடு. சில்லறை விலைகள் சுமாராக உயரும்படியே வரி விதிப்பு முறை வகுக்கப்பட்டுள்ளது. இந்த வரி மூலம் முதல் வருஷத்தில் 10 கோடி ரூபாய் கிடைக்கலாம். புகையிலைச் சாகுபடியின் அபிவிருத்திக்காக வருஷா வருஷம் 10 லட்சம் ரூபாய் கிராண்டு கொடுக்க உத்தேசித்துள்ளோம் என்று பொக்கிஷ மெம்பர் கூறினார். 'வனஸ்பதி' என வழங்கப்படும் வெஜிடபிள் உற்பத்திச் சரக்குக்கு வரி விதிக்க உத்தேசித்திருப்பதால், நிர்வாகத் துறையில் எவ்விதக் கஷ்டமும் ஏற்படாது.

இவ்வரி மூலம்—அதாவது—அந்தர் 1-க்கு 7 ரூபாய் 140 லட்சம் ரூபாய் கிடைக்கலாம்.

தபால் டெலிபோன் கட்டணங்களையும் சற்று உயர்த்த உத்தேசம். இதனால் சுமார் 120 லட்சம் கிடைக்கலாம். உள் நாட்டுத் தபால் கட்டணத்தில் ஒரு தோலாவுக்கு மேல் ஒவ்வொரு தோலாவுக்கும் அரையணாவிலிருந்து ஒரு அணா உயர்வு. உள் நாட்டுப் பார்ஸல் கட்டணத்தில் முதல் 40 தோலாக்களுக்கு 4-அணாவிலிருந்து 6-அணா உயர்வு. டெலிபோன் வாடகையின் ஸர்சார்ஜ் 1/6 ஆக இருப்பது 1/3 ஆக உயரும்.

இந்திய சர்க்காரின் கடன் சுமை 1943-44-ம் வருஷக் கடைசியில் 317 கோடி ரூபாய்க்கு மேலிராதென்று மதிப்பிடப்படுகிறது. என்று அவர் குறிப்பிட்டார்.

* * *

ஸ்ரீ ஆனேக்கு அவமதிப்பு

சென்ற மாதம் 25-ந் தேதி நாகபுரி ரயில்வே ஸ்டேஷனில் மாஜி வைஸ்ராய் நிர்வாக சபை அங்கத்தினரான ஸ்ரீ எம். எஸ். ஆனே புனாவுக்குச் செல்ல பம்

(18-ம் பக்கம்)

இந்த இதழில்

	பக்கம்
போர் போகும் போக்கு	4
புஷ்பஹாரம் (தொடர்கதை)	5
குண்டலகேசி	7
திட்டமான வாழ்க்கை	9
கண்டுபிடித்தது இவர்களே!	10
அயர்லாந்தின் அதிர்ஷ்டம்	11
பேய்கள் உண்டா? (சிறுவர் பகுதி)	12
நாடோடிப் பாட்டுக்கள்	13
என்னுடைய யுக்தி (சிறு கதை)	15
தெய்வ பக்தி	16



ரஷ்யப் போர் முனை

ஜெர்மன் படைகள் சில பகுதிகளில் ரஷ்ய முன்னேற்றத்தைத் தடுக்கத் தீவிரமாகத் திருப்பித் தாக்கி வருகின்றன. தென் அரங்கத்தில் கர்ஸ்க்—க்ார்காவ் ரயில் பாதைக்கு மேற்கேயும் டானட்ஸ் பகுதியிலும் இரு பெரிய யுத்தங்கள் நடைபெறுகின்றன. ஓரலைக் காக்க எதிரிகள் ஏராளமான விமானங்களை உபயோகித்து வருகிறுர்கள். இதற்கிடையில் செம்படையின் 25-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, பல நேச நாடுகள் அப்படையின் வீரத்தைப்பாராட்டிச் செய்திகள் அனுப்பின. ஸ்டாலின் விடுத்த அறிக்கையொன்றில்,செம்படை தனியாக நின்று போராடுவதை எடுத்துக் காட்டி, இரண்டாம் போர் முனையில்லாத குறையை வற்புறுத்தினுர். பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையில் லார்டு பீவர் புரூக் அக் குறையை உடனே நீக்க வேண்டியது அவசியமென்றுர். நாஸிகள் திங்கள் படைகளைத் திருத்தியமைத்துக் கொண்டு, மீண்டும் ரஷ்யாவைப் பலமாகத் தாக்கக் கூடுமென்றும், அதற்குள் அவர்களை மறுபுறத்திலிருந்து அடித்து வீழ்த்த வேண்டுமென்றும் கூறினுர். பிரிட்டனிலிருந்தே ஐரோப்பா மீது நேசப் படை பாயலாமென்றும் அவர் தெரிவித்தார். ஆனுல் சர்க்கார் சார்பாகப் பதிலளித்த லார்டு ஸைமன் அந்த யோசனைக்கு அவ்வளவாக ஆதரவளிக்கவில்லை. இப்போது பிரிட்டனும், அமெரிக்காவும் எடுத்துக்கொண்டநடவடிக்கைகளுக்கும், இரண்டாம் போர் முனைக்கும் வித்தியாசமில்லையென்ற முறையில் பேசினுர். டியுனிஸியாவிலிருந்து எதிரியை விரட்டியதும் இரண்டாம் போர்முனை ஏற்படுமென்று சில தினங்கள் முன் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார். ஆனுல் டியுனிஸியா போர் விரைவில் முடியுமென்று எதிர்பார்ப்பதற்கில்லையென நேச அதிகாரிகளே ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

* * * *

ஆப்பிரிக்கா அரங்கம்

டியுனிஸியாவில் தென் கோடியிலுள்ள மாரத் அரண் வரிசையை பல இடங்களில் எட்டாவது பிரிட்டிஷ் படை துளைத்துவிட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இனி அப்பகுதியில் இதுவரை போலில்லாது, யுத்தம் வலுக்குமென எதிர் பார்க்கலாம். வடக்கே சில தினங்கள் முன்னேறி கெஸ்ரின் கணவாய் போன்ற கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றிய அச்சுப் படைகள் இப்போது பின்வாங்க நேர்ந்திருக்கிறது. அக்கணவாயும், கெஸரின் நகரும் மீண்டும் நேசக் கட்சியின் வசமாகி விட்டன. கெஸரினுக்கு தென் மேற்கே அதே தூரத்திலிருக்கும் பெரியானுவையும் எதிரிகள் காலி செய்துவிட்டனர். அப்பகுதியிலுள்ள நேசப் படையின் கவனத்தைக் கலைப்பதற்காக அச்சுத் துருப்புகள் வட டியுனிஸியாவில் தீவிரமாக முன்னேறித் தாக்க ஆரம்பித்திருக்கின்றன. மெட்ஜஸ் எல்பாப், ஸிடி நிஸி இவ்விரு ஸ்தலங்களுக்கருகே கடும் போர் நடந்துவருகிறது.

* * * *

நேசநாடுகளிடையே மனக்கசப்பு

லண்டனில் இருக்கும் சில நேச சர்க்கார்களுக்கும், ஸோவியத் சர்க்காருக்கும் இடையே கசப்பு அதிகரித்துக்கொண்டு வருவதாக நியூஸ் கிரானிகிள் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டது: இங்கு ராஜதந்திர வட்டாரங்களில் இந்தக் கசப்பின் அறிகுறி கவலையைத் தருகிறது. லண்டனில் போலிஷ் சர்க்கார் ஆதரவு பெற்ற ஒரு பத்திரிகை ஸோவியத்-போலிஷ் உறவு பாதிகமடைந்திருப்பதாகவும் ஸோவியத் ஸர்க்கார் கடுமையாக நடந்துகொள்வதாகவும் இவ்வாரம் எழுதியது. உக்ரேனைப்பற்றியே பிரஸ்தாபம் எழும்பியதாம். அங்கு போலந்துக்கு உரிமையைத் தர சோவியத் விரும்பவில்லையாம். யுகோஸ்லேவிய யுத்த மந்திரியும், கொரில்லாப்படைத் தலைவருமான ஜெனரல் மிஹிலோவிச் பால்கன் பிரதேசத்தில் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைபற்றி சோவியத் ஸர்க்காருக்கும் யுகோஸ்லேவிய சர்க்காருக்கும் இடையே சற்று மனத் தாங்கல் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

* * * *

கோயபெல்ஸின் பகீரதப் பிரயத்தனம்

ஒரு ஸ்வீடிஷ் பத்திரிகையின் மாஜி பர்லின் நிருபர் எழுதுவதாவது:—ஜெர்மனியில் ராஜீய அதிகாரமனைத்தும் தற்போது ஹிட்லர்வசமே திரண்டிருக்கவில்லை. ஹிட்லர் ராணுவப் பிரச்னைகளிலேயே தமது காலமனைத்தையும் செலவிட்டு வருவதால் ஜெர்மனியில் கோயபெல்ஸ், ஸாக்கெல், ஸ்பீ, லே என்ற நான்கு பேர்களுக்கே அதிக ஆதிக்கமிருந்து வருகிறது. இந்நால்வரிலும் கோயபெல்ஸ் அதிக சக்தி வாய்ந்தவராக விளங்குகிருர். அவர் ரஷ்யர் செய்வது போல மார்ச்சு 15-ந் தேதிக்குள் ஜெர்மன் மக்களை எல்லாம் சர்வ சாதன யுத்தத்திற்குத் தயார் செய்வதில் மும்மரமாக ஈடுபட்டிருக்கிருர். அவர் சிருஷ்டிக்கும் சிப்பாய்கள் 6 வாரப் பயிற்சியே பெறுகின்றனர். பிறகு அவர்கள் போர்முனைக்குச் செல்லுவார்கள். ஸ்பீ என்பவர் மூலப்பொருள்களை சப்ளை செய்யும் மிகக் கஷ்டமான வேலையைச் செய்ய வேண்டியவராக இருக்கிருர். ஜெர்மனியில் ஏறக்குறைய எல்லா மூலப்பொருள்களும் குறைவாக இருக்கின்றன. மூலப் பொருள்களில்லாததால் பல முக்கியமான தொழிற்சாலைகளிலிருந்து தொழிலாளர்கள் வீடுகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டனர்.

* * * *

ஹிட்லர் பிரகடனம்

ஜெர்மன் ரேடியோ, நாஸி கட்சி ஸ்தாபனதினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஹிட்லர் அனுப்பிய பின்கண்ட பிரகடனத்தை ஒலிபரப்பியது:—

'நான் இன்னும் கிழக்கில் (ரஷ்யாவில்) இருக்கவேண்டியிருப்பதால் உங்களிடையே இருக்கமுடியவில்லை. நமது விரோதிகளுடைய சதியாலோசனையை வேரறுத்து அதனை ஒழிப்பதற்கு முன்பு போராட்டத்தைக் கைவிடுவதில்லை என்ற உறுதியை நாஸிக் கட்சி எப்போதும் கொண்டிருக்கிறது. இந்த வெறியை நீங்கள் என்னிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கிறீர்கள். இந்த வெறியே எனக்கு இன்றும் முன்போல் உத்வேகமளித்து வருகிறதென்றும் நான் உயிருடனிருக்கும் வரை இந்த வெறி என்னைவிட்டு நீங்காதென்றும் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். ஜெர்மனியிலுள்ள நாசவேலைக்காரர்களை ஈவிரக்கமின்றி அழியுங்கள்.

யூதர்களை நாம் அறவே ஒழிப்போம். சுதந்திரத்துக்காகப் பாடுபடும் மனித வர்க்கமே இந்த போராட்டத்தில் வெற்றியடையும். நானே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கடவுள் என்னைப் படைத்திருக்கிருர் என்று நம்ப எனக்கு உரிமையுண்டு. நான் பொறுக்க வேண்டியிருந்த பல மனக்கவலைகள் என்னைவிட மனோதிடம் குறைவாக உள்ளவர்களுக்கு மிக்க சஞ்சலத்தைக் கொடுத்திருக்கும்.

* * * *

ஜப்பானின் முஸ்தீப்பு

வட ஆஸ்திரேலியாவைச் சூழ்ந்துள்ள பல்வேறு தீவுகளில் ஜப்பான் விசேஷ முஸ்தீப்பு செய்திருக்கிறது. ஏராளமான துருப்புகளையும் கடற்படைகளையும், விமானங்களையும் திரட்டி வைத்திருப்பதாக ஜெனரல் மெக் ஆர்தர் அறிவிக்கிருர். தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள நேசக் கட்சி நிலையங்களை ஒரேயடியாகத் தாக்கி வீழ்த்துவதே எதிரியின் நோக்கமெனச் சொல்லப்படுகிறது.

* * * *

துருக்கிக்கு இனேனு எச்சரிக்கை

தேர்தல் பிரசாரமொன்றில், துருக்கி ஜனுதிபதி இனேனு தமது மக்களுக்கு பின்கண்டவாறு தெரிவித்தார்:—

"இந்த யுத்தத்தில் நாம் கலக்காமல் இருக்கமுடியுமா என்பது நமது இஷ்டத்தைப் பொறுத்ததில்லை. ஆகவேதான் நாம் எவ்வித தியாகத்திற்கும் தயாராகிக்கொண்டு வருகிறோம். நமது முயற்சியை மேலும் அதிகரிப்போம். யுத்த காலத்திலும் அதற்கப்புறமும் நாம் அதிக ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்."

* * * *

ரிப்பன்டிராப் ரோம் சென்றதேன்?

ஜெர்மன் அந்நிய மந்திரியான ரிப்பன் டிராப் சமீபத்தில் ரோமுக்குச் சென்று அங்கு நான்கு தினங்கள் தங்கியிருந்தார். அப்போது அவர் ஹிட்லரிடமிருந்துகொண்டு போயிருந்த செய்தியை முஸோலினியிடம் கொடுத்தார். ரிப்பன் டிராப்புக்கும்,முஸோலினிக்கும் விசேஷ நல்லுணர்ச்சியுடன் சம்பாஷணை நடந்ததாக அறிவிக்கப்படுகிறது. ஜெர்மன் பிரசாரகர்கள் இந்நிகழ்ச்சியை கஸபிளாங்காவில் நடந்த சர்ச்சில்-ரூஸ்வெல்ட் சந்திப்புடன் ஒப்பிடுகின்றனர். ரிப்பன் டிராப் தற்போது ரோமிலுள்ள நியுயார்க் ஆர்ச் பிஷப்புடன் சம்பாஷித்ததாக ஒரு வதந்தி வெளியாகியிருக்கிறது. அப்பேச்சு ஏதோ சமாதான யோசனையைப்பற்றியதாயிருக்கலாமென்றும் சிலர் கூறுகின்றனர்.

உப தேர்தலில் வெற்றி



சென்னை கார்ப்பொரேஷனில் காலியாக விருந்த ஒரு ஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்காக திருவல்லிக்கேணி டிவிஷனில் நடந்த இடைத் தேர்தலில் அ. இ. கிரிக்கெட்போர்டு கௌரவக் காரியதரிசி ஸ்ரீமான். கே. எஸ். ரங்காராவ் அதிகமான ஓட்டுகளைப் பெற்று வெற்றி பெற்ருர்.



ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாஸன்

அத்தியாயம் 1

சிவசங்கரையர் சாத்துப்பட்டி கிராமத்தில் ஓர் மிராசுதார். சகல சௌபாக்கியங்களும் பெற்றவர், ஆனுல் ஆண்டவன் ஓர் குறையை மட்டும் அவருக்கு வைத்திருந்தான். அவருக்குக் குழந்தை இல்லாதது தான் அக்குறை. ஆகையால் சிவசங்கரையரும் அவர் தர்மபத்தினி சொர்ணும்பாளும் அய்யரின் தங்கை குழந்தையான (தாயில்லாக் குழந்தை) சுந்தரேசனைத் தங்கள் செல்வக் குமாரனைப்போல் பாவித்து வெகு அருமையாக வளர்த்து வந்தனர். ஸ்வர்ணும்பாளுக்கு மட்டும் குழந்தைப்பேறில்லாத வருத்தம் உள்ளூற இருந்து வந்தது. தனது வயிற்றில் பிறந்த குழந்தை இருந்து சுகப்படவேண்டிய இடத்தில் இந்த ஊரான் பிள்ளை வந்து சுகபோகமடைகிருனே என்று நாளுக்கு நாள் சுந்தரேசனிடம் அவளுக்கு வெறுப்புத்தட்ட வாரம்பித்தது.

சுந்தரேசனே இத் தம்பதிகளை பிரத்தியக்ஷ தெய்வமாகவே பாவித்து அவர்கள் இட்ட கோட்டை தாண்டாமல் மிகவும் அடக்க ஒடுக்கமாகவும், வெகு புத்தி சாலியாகவும் வளர்ந்து வந்தான். பையன் சுறுசுறுப்பாகப் படித்து 19 வயது நிறைவதற்குள் பி. ஏ. (ஆனர்ஸ்) பரீக்ஷையிலும் தேறிவிட்டான். அதற்குள் அய்யர் அவனுக்கோர் எழில் வாய்ந்த பெண்ணைப் பார்த்து மணம் புரிவித்தார். பெண்ணிற்கு ஓர் தாத்தா மட்டும் தான் இருந்தார். அந்த தாத்தா சிவசங்கரையருக்கு தூரத்து சம்பந்தங்கூட உண்டு. சுந்தரேசனைச் சற்று நிற்கவாவது உட்காரவாவது கூட விடாமல் வேலை வாங்கிக்கொண்டிருந்த அவ்வுத்தமி சுவர்ணும்பாள், இப்பொழுது நாட்டுப் பெண் ஜானகி மீது தன் காரத்தை தீர்த்துக் கொள்ள ஆரம்பித்தாள். ஆயிரமாயிரமான பி. ஏ,க்கள் வேலையில்லாமல் திண்டாடும் இந்த யுகத்தில் நம் சுந்தரேசனுக்கு யார் வேலை வைத்துக் கொண்டு காத்துக்கொண்டிருப்பவர்கள்? அவன் வேலையைத் தேடித் திரியாத கச்சேரிகளுமில்லை; ஊருமில்லை, 'அப்ளிகேஷன்' எழுதி போஸ்ட் செய்வதற்கும், வேலைக்காக விளம்பரமேதாவது வந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக பேபர்களை விலைக்கு வாங்கினதற்குமே 50 ரூ. க்கு மேல் சுந்தரேசன் செலவழித்தாய் விட்டது. மாதம் 15 ரூ. சம்பளத்தில் ஓர் குமாஸ்தா வேலை கூடக் கிடைக்கக் காணும். பகலெல்லாம் வேலைக்காக அலைந்து திரிந்து வீடு திரும்பின உடன் "வாடா, குஷாலாகத் திரிந்து விட்டுவா, பிள்ளை இல்லா சொத்துதான் கொட்டி கிடக்கிறதே, தின்னு கழிவதற்கு, அடீ, ஜானகி உன் அழகான ஆம்படையானை உட்கார்த்தி பஞ்சபக்ஷபரமானமும் பரிமாரு! பாவம்! உத்தியோகம் செய்துவிட்டு களைத்து வந்திருக்கிருன்" என்று பலவித ஆசிமொழிகளை சுவர்ணும்பாள் கூறுவாள். சுந்தரேசனுக்கு வரவர ஜீவனத்திலேயே வெறுப்புத் தட்ட ஆரம்பித்தது. சிவசங்கரய்யர் மட்டும் பையனுக்கு வேலைக்காக பல நண்பர்களை பார்த்துக் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

மாலை 6-மணி இருக்கலாம். சிவசங்கரய்யர் வாசல் தாழ்வாரத்தில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார். சுவர்ணும்பாள் ராமஜபம் செய்தவாறு சுவாமி விளக்கிற்கு திரி திரித்துக் கொண்டிருந்தாள். ஜானகி சமைத்துக்கொண்டே "ஈசா! அவர் இன்னும் எவ்வளவு நாட்கள் இவ்விதம் கஷ்டப்பட வேண்டுமோ! இன்று வெடியற் காலம் எழுந்து வெளியே சென்றவர் மத்தியான சாப்பாட்டிற்குகூட வரவில்லையே. அன்னுகாரமின்றி நாளெல்லாம் அலைந்து திரிந்தால்கூட ஒரு வேலை கிடைக்கமாட்டேன் என்கிறதே. வீட்டு வாசலை மிதிக்கு முன் வசை சொற்களைக் கேட்க வேண்டி இருக்கிறதே. அதோ வந்து விட்டார்போலிருக்கிறது. வாசற்பக்கம் பேச்சுகுரல் கேட்கிறது: கொஞ்சம் காப்பியாவது சுடவைத்து கொடுப்போம்"

என்று காப்பி கலந்து சுட வைத்துவிட்டு கணவனுக்கு கை கால்கள் அலம்பிக்கொள்ள ஜலமெடுத்து வைக்க வெந்நீர் உள்ளிற்கு சென்ருள்.

நாளெல்லாம் அலைந்து திரிந்ததால் களைப்பு மேலிட்டு சுந்தரேசன் வீட்டை அடைந்தான். அவன் உள்ளே நுழையும் பொழுதே அய்யர் "என்னடாப்பா சுந்தரேசா! இன்றைக்கு மத்தியானம் சாப்பிடக்கூட வரவில்லையாமே! வேலை ஏதாவது அகப்பட்டதா? என்ன சமாச்சாரம்? முதலில் போய் கை கால் அலம்பிக்கொண்டு கொஞ்சம் காப்பியாவது சாப்பிட்டுவா. அப்புறம் பேசுவோம்" என்று அன்பாக கூறினுர்.

சுவர்ணும்பாள், "வீட்டிற்கு சாப்பிடவராவிட்டால் உங்கள் மருமான் பட்டினிகிடந்தானென்று நினைக்கிறேள்? ஊரில் நூறு ஹோட்டல்களிருக்கின்றன. காலையிலிருந்து நான்கு தடவைகள் நன்ருக ஹோட்டலில் சென்று மொக்கி இருப்பான். இந்த வீட்டில் தான் பிள்ளையில்லா சொத்து கொள்ளைபோகிறதே. தண்டச் சோத்து தடிராமன் ஒன்று போதாதென்று, அதற்கொரு கால் கட்டையையும் கட்டி இருக்கேயள். இன்னும் என்ன குறைச்சல்? இரண்டுமாக வீட்டை சூறையிடட்டும். வாங்கள் நாமிருவரும்தலைமேல் துணியைப் போர்த்திக்கொண்டு தேசாந்திரம் போகலாம். வீடு தான் சத்திரமாகவிருக்கிறதே" என்று வாய் ஓயாமல் பேசலானுள்.

சிவசங்கரய்யர், "போடி அசடே, என்னவெல்லாமோ உளருகிருயே. முதலில் எழுந்து போய் குழந்தைக்கு ஏதேனும் பக்ஷணமிருந்தால் கொடு"

சுவர்ணும்பாள் "ஆமாம் குழந்தை, ஸ்வரணையாக பெத்தெடுத்த குழந்தை. ஊரில் அலையும் நாயை எல்லாம் வீட்டில் கொண்டுவந்துவிட்டு; குழந்தை உறவு கொண்டாடுங்கள்" என்றவாறு புடவையை தட்டிக்கொண்டு திண்ணையை விட்டு கீழே இறங்கி பக்கத்து வீட்டு பத்துவுடன் வம்பு பேச சென்று விட்டாள். அப்பொழுதே சிவசங்கரய்யரின் நண்பர் ராமச்சந்திர கனபாடிகளும் அய்யரைத்தேடிக் கொண்டு வரவே இருவரும்



"இதென்ன அலங்கோலமோ வெள்ளிக்கிழமையும் அதுவுமா சந்தி சமயத்தில், அழகை" என்று முணுமுணுத்தாள் சொர்ணம்பாள்

இண்ணையில் உட்கார்ந்து கொண்டு பேச்சு சுவாரஸ்யத்தில் ஆழ்ந்துவிட்டனர்.

உள் நுழைந்த சுந்தரேசன் தனது மாமியின் கடுஞ் சொற்களை செவியுற்று ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவன் மொழிந்த ஒரொரு மொழியும் அவனது புண்பட்ட ஹிருதயத்தை ஈட்டிபோல் குத்திப் புண்படுத்தின. அவன் வேலைக்காகப் படும்பாடு ஈசனுக்குத் தெரியுமல்லாது சுவர்ணும்பாள் அறிவாளா? சே! இனி இவ்வீட்டில் ஒரு நிமிஷமும் நிற்க நமக்கு உரிமையில்லை. அவர்களாகத் தானே எனக்குக் கல்யாணம் செய்வித்தார்கள். இஷ்டமுண்டானல் அவளுக்கு ஒரு வாய் சோறு போடட்டும். இல்லையேல் பிறந்தகத்திற்கு அனுப்பி விடட்டும். என்னல் சோறு போடச் சக்தி வந்த பொழுது அவளை அழைத்து செல்கிறேன். இப்பொழுது அவளிடம் இந்த சமாசாரத்தை தெரிவித்தால் மிகவும் வருத்தப்படுவாள். நாம் இப்படியே ஒருவரிடமும் கூருமல் சென்றுவிடுவதேமேல். இந்த வீட்டில் இனி ஒரு பிடி சோறு தின்பதைவிடத் தற்கொலை செய்து கொள்வதே பதின் மடங்கு மேல்'' என்று யோசித்தவண்ணம் விர்ரென்று பின்புற வழியாக வெளியே சென்றுவிட்டான். தான் செல்லுமுன் தனது நாயகியை ஒரு முறை கண்டு பேச வேண்டுமென்று அவன் மனம் துாண்டிற்று; மறு க்ஷணம் மனதை திடப்படுத்திக் கொண்டு அபலை ஜானகியைக் காப்பாற்றுமாறு பகவானை துதித்த வண்ணம் வெளியே சென்றுன்.

ஜானகியோ காப்பியை சுட வைத்துக்கொண்டு கணவன் வருகையை எதிர்பார்த்தவண்ணமிருந்தாள். அவளுக்கு ஒரு நிமிஷமும் ஒரு யுகமாகத்தோன்றிற்று. மெள்ள வாயில்புறம் வந்து எட்டிப் பார்த்தாள். அவ்விடம் கன்பாடிகளையும், அய்யரையும் தவிர்த்து வேரொருவரையும் காணவில்லை. வீடு பூராவும் சுற்றிப் பார்த்தாள். கணவனைக் காணவில்லை. கொல்லைப்புறம் ஓர் சமயம் போயிருக்கலாமென்று பார்த்தாள். அங்கும் காணவில்லை. தான் அவர் வந்தாரென்று நம்பினதே தவருக இருக்கலாம், மாமி வேறுயாரையாவது மிரட்டிக்கொண்டிருந்தாரோ என்று சற்று சமாதானமடைந்தாள். மணி ஏழு அடித்தது ஜானகி மனம் என்னவோ வேதனையால் தழும்பிக் கிடந்தது. ஏதோ தனக்குக் கெட்ட காலம் சமீபத்தில் வரப்போவதாக எண்ணி எண்ணி தவித்தாள். அப் பெண்ணிற்கு அச்சமயம் சமாதானம் கூறுபவர்தான் யார் உண்டு? பாவம்! மனக்குழப்பத்திலேயே தன்னுடைய தினசரி வேலைகளை மறவாது செய்தவாறு பெரியவருக்கு சந்தியாவந்தனத்திற்கு ஜல மெடுத்து வைத்து பலகை போட்டு இலையும் போட்டுச் சமயலறையை ஒழுங்குசெய்து, விட்டு, சுவாமிக்கு விளக்கேற்றி நமஸ்காரம் செய்தாள். ''பராசக்தி, பரமேச்வரி, தாயே! அவருக்குச் சீக்கிரம் ஒரு நல்ல உத்தியோகம் அகப்படும்படி செய், அம்பிகே; உனக்கு பத்து தேங்காய்கள் உடைக்கிறேன். அர்ச்சனை செய்கிறேன். இவ்வனுதையை கரையேற்று, தாயே! அவர் வேலைக்காக இரவும், பகலும் அலைவதைக் காண சகிக்க முடிய வில்லையே! அலைந்து அலைந்து துரும்பாய் விட்டாரே. இன்னும் எவ்வளவு நாட்கள் தான் நாங்கள் மாமா, மாமிக்கு பாரமாக, விருந்து கொண்டு தண்ட சோறு சாப்பிடுவது? மாமி சொல்வது சரிதான், இதுகாறும் அவரைப் போஷித்த அவர்களுக்கு இனி நாம் சிச்ருஷை செய்வதுதான் அழகு. ஸ்வாமீ, பகவானே! நாங்கள் வேண்டுமென்று சும்மா இருக்க வில்லை. உமக்கு தெரியுமே அவர் பாடுபடுவது'' என்றும் பலவிதமாக கைகூப்பிய வண்ணம் ஜானகி அம்பிகையைப் பிரார்த்தித்தாள். பெரியவர் கனபாடிகளை அனுப்பித்துவிட்டு வீட்டினுள் வந்து ''சுந்தரம், சுந்தரம்'' என்று இருமுறை அழைத்தார், பதில் இல்லை. ''சரி பகலெல்லாம் அலைந்து திரிந்துவிட்டு வந்திருக்கிருன் குழந்தை. இளைப்பாரட்டும் பாவம்'' என்று நினைத்தவாறு ஜானகி சித்தமாக முத்தத்தில் எடுத்து வைத்திருந்த சொம்பு ஜலத்தில் கைகால்கள் அலம்பிக்கொண்டு, சாப்பிடும் அரையில் தயாராக போட்டிருந்த பலகையில் வந்துட்கார்ந்து சந்தியாவந்தனம் செய்தார். சந்தியா வந்தனம் செய்து முடிந்ததும், ''அம்மா ஜானகி! சுந்திரத்தைச் சாப்பிட கூப்பிடு. பகல் போஜனம்கூட செய்யாமல் பட்டினியாக கிடக்கிருன். அவனையும் இன்னும் காணேம். பத்மு வீட்டிற்குப் போய் விட்டால் அவளுக்கு பொழுது போவதே தெரியாது'' என்ருர்.

மெய் மறந்து ஸ்வாமி தியானத்திலிருந்த ஜானகி பெரியவரின் குரலைக் கேட்டு திடுக்கிட்டவளாக ''மெள்ள வந்து கூடத்துக்தவின் பின்புறம் நின்று கொண்டு மெதுவான குரலில் ''அவரை வீட்டில் எங்கும் காணேமே'' என்ருள்.

இவ்வார்த்தைகள் அப்பொழுதுதான் அங்கு திரிக் கூடையும் கையுமாக பிரத்தியக்ஷமான சுவர்ணும்பாளின் செவியில் விழுந்தது. உடனே ''மறுபடியும் ஊர் சுத்த சென்று விட்டதா அவலம்? வர வர இவன் நடத்தையே எனக்கு கொஞ்சம்கூட பிடிக்கவில்லை போங்கள். சொல்லப்போனல் நான் கெட்டவள்......''

அய்யர் குறுக்கிட்டு 'சரி, உன் வாயை மூடு, வீட்டிற்குள் வந்ததும் வராததுமாய் நூறு அவச் சொற்கள் அடுக்கினய். கோபித்துக்கொண்டு பட்டப் பட்டினியாக எங்கு சென்று விட்டானே என்று மனைமேலிருந்து எழுந்து வீதிக்கு சென்ருர். ஜானகி ஒன்றும் தெரியாமல் திருதிருவென்று விழித்தாள்.

சுவர்ணும்பாள் கணவனை பின் தொடர்ந்தவளாக எடுத்ததிற்கெல்லாம் என்னை அவதூறு சொல்லத்தான் உங்களுக்குத் தெரியும். அப்படி எங்கேபோக அவனுக்கு இடமிருக்கிறது? கழுதை கெட்டால் குட்டிச் சுவர். எல்லாம் போன வழியில் திரும்பி வருகிருன். நீங்கள் இந்த இருட்டில் அவனை எங்கென்று தேடப்போரயள்? சாப்பிட வாருங்களேன் என்று வழிமறித்தாள்.

''தூரப்போ. கழுதை, உன்னுல் தான் இவ்வளவு கலாட்டா என்று கர்ஜித்தவர் ''விர்ரென்று வெளியே சென்று விட்டார்.

உள்ளே திரும்பி சென்று சுவர்ணும்பாள் ஜானகியை கண்டபடி திட்டினுள். அப் பேதை பெண் ஒருபுறம் மாமியின் கொடுஞ் சொற்களை தாங்காமலும், கணவன் காணுமல் போனதினுலும் விம்மி விம்மி அழலானுள்.

''இதென்ன அலங்கோலமோ வெள்ளிக்கிழமையும் அதுவுமா சந்தி சமயத்தில் அழுகை. எக் கேடு கெட்டுப்போங்கள் எனக்கென்ன. இந்த பிராஹ்மணனுக்குத் தான் இப்படி புத்தி போகுமோ! கொட்டாப்புளியாட்டமா அந்த அசமஞ்சத்தை தேட போய்விட்டாரே. போனவனுக்கு வீடு திரும்ப வழி தெரியாதா? இரண்டு நாள் பட்டினி கிடந்தால் தானே திரும்பி வருகிருன். இவனை குழந்தை முதல் வளர்த்துப் படிக்க வைத்து பாடு பட்டதற்கு. அந்தப் பெண் ஒன்றை வேறு எங்கள் காலில் கட்டிவிட்டு இப்படி தொலைவானே. இப்படி ஒரு பிராமணரை அலைய வைக்கிருனே. அந்தப் பாவம் அவனை விடுமோ'' என்று முணுமுணுத்துக்கொண்டே ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்து ஆடினுள்.

தனது நண்பர்கள் சிலரையும் கூட அழைத்துக்கொண்டு சீவ சங்கரய்யர் அக்கிரஹாரம் பூராவும் சுந்தரேசனைத் தேடினர். ஊரிலுள்ள குளங் குட்டை ஒன்று பாக்கி இல்லாமல் தேடியாயிற்று. யாரைக் கேட்டு பார்த்தாலும் அவனைப் பற்றிய ஒரு தகவலும் கிடைக்க வில்லை. இரவு 11 மணி சுமாருக்கு அய்யர் ''புஸ், புஸ்'' என்று மேல் மூச்சு வாங்க விடு வந்து சேரவே, சுவர்ணும்பாள் ''நான் அப்பொழுதே சொல்ல வில்லையா? சிறு குழந்தையா தேடுவதற்கு? இரண்டு நாட்கள் சென்ருல் தன்னைப்போல் திரும்பிவருகிருன். வாருங்கள் ஒருவாய் சாப்பிடுவோம்'' என்று மிகவும் பரிவாக கூப்பிட்டாள். அய்யர்'' உன் உப்சாரமோ, உன் மூஞ்சியோ, எனக்கு சோறும் வேண்டாம், தண்ணியும் வேண்டாம், நீ வேண்டுமானுல் வயிறுபுடைக்க சாப்பிடு. அந்தக் குழந்தை என்ன செய்கிருளோ. ஒரு வாயாவது சாப்பிட்டாளா?''

சுவர்ணும்பாள் முகத்தை சுளித்துக்கொண்டு, ''குடி முழுகிப்போய்விட்டதுபோல் அழுது கொண்டு கிடக்கிறது. கெஞ்சாதவண்ணம் கெஞ்சினேன். சாப்பிடமாட்டாளாம்! எப்படியோ போங்கள். எனக்கும் சாப்பாடுவேண்டாம்'' என்று ஒரு பாயை விரித்துபோட்டுக் கொண்டு அகங்காரத்துடன் தீடாலென்று படுத்துக் கொண்டாள்.

(தொடரும்)

துருப்பேற்றிச் செல்லும் விமானத்தில்

துருப்புகள் ஏற்றிச் செல்லும் பிரிட்டிஷ் விமானததில் இரண்டு ஸோல்ஜர்கள். இவர்களிடம் சகலவிதமான சாதனங்களும் இருக்கின்றன.

சித்திரமும் சிருங்காரமும்

''பஹாமா பாதை''

பாரம்வுண்ட் கம்பெனியாரின் ''பஹாமா பாதை'' என்ற படம் மிகவும் ஸ்வாரஸ்யமானது. இயற்கை வர்ணத்தில் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தின் கதை வருமாறு:—

பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகளில் ''ஸால்ட் கீ'' என்ற தீவும் ஒன்ருகும். இந்தத் தீவுக்கு கரோல் டெல்ப்ரிட்ஜ் என்ற பெண் வந்து சேர்ந்தாள். கரோல் உலகத்தின் பல இடங்களையும் போய்ப் பார்த்தவள். கரோலுக்கும் அத்தீவில் இருந்த அட்ரியன் எயின்ஸ் வர்த்துக்கும் நட்பு ஏற்படுகிறது. அட்ரியன் உலகமறியாதவன்.

அட்ரியனின் தகப்பனர் திடீரென்று இறந்துவிட்டபடியால் உப்பளத் தீவு முழுதும் அட்ரியன் வசம் வந்து சேர்ந்துவிடுகிறது. இத் தீவு இவர்களது குடும்பத்தாரிடமே பல தலைமுறைகளாகவே இருந்து வந்ததாகும். இந்தத் தீவில் உப்பளக் கழியில் சுமார் 400 பேர் வேலை செய்து வந்தனர். அவர்கள் இக் குடும்பத்தாரின் கீழ் அடங்கி வந்தவர்கள்.

அட்ரியனின் தாயார் ஒருவிதமான பயங்கொள்ளி: அவளுக்குத் தன் கணவனை அந்தத் தீவில் இருந்தவர்கள்தான் கொன்றுவிட்டனர் என்பது எண்ணம். எப்போதும் அவளுக்கு அவர்களைக் கண்டாலே நடுக்கம் எடுத்துவிடும்: தனது மகன் தீவின் அதிபதியானவுடனேயே அவனையும் கொன்றுவிட அவர்கள் உத்தேசித்திருப்பதாகவும் அவள் நம்புகிருள். ஆகவே அவன் தன் பிள்ளையிடம் வேலையை மேற்பார்வையிட வேறு ஒருவரை நியமிக்கும்படி நிர்ப்பந்தப்படுத்துகிருள். இதைத்தன் மனமார ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இறுதியில் அட்ரியன், அங்கீகரித்து அதன் பிரகாரம் நடக்க வேண்டி நேரிடுகிறது.

புதிதாக நியமிக்கப்பட்ட டெல்ப்ரிட்ஜ் என்பவர் அவர் ஒரே கோழை: தைரியமில்லாதவர். அவருடன் அவரது புத்திரி கரோலும் வருகிருள் கரோல். அதிரூபவதி, அழகுமிக்காள். தன் தகப்பனரின் துர் புத்தியை அடக்கி, தீயவழியில் பிரவேசிக்க விடாமல் செய்வதே காராலின் முக்கிய வேலையாகிறது. இந்தத் தீவுக்கு வந்தவுடன் இதற்கப்புறம் தன் முயற்சி பலிக்காது என்பதை கரோல் கண்டுகொள்கிருள். ஸால்ட் கீ தீவில் டெல்ப்ரிட்ஜ் நடத்தை மாருத போதிலும், அவனுடன் இருக்க முடிவு செய்கிருள் கரோல்.

கரோல் தன் பிதாவுடன் அந்தத் தீவில் வந்திறங்கும் போதே அவளை அட்ரியன் பார்த்து விடுகிருன்: தன் தகப்பனருக்கு உதவி புரிவது மட்டுமே அந்தத் தீவில் அவளுக்குக் காரியமாக இருக்காது என்று அவன் தனக்குள்ளேயே தீர்மானித்து விடுகிருன். இது தவிர அவளைப்பற்றிய சிந்தனையும் அவனுக்கு அதிகமாகிறது. ஆரம்பம் முதற்கொண்டே அவளைப் பலவிதத்திலும் அவமரியாதை பண்ண ஆரம்பிக்கிருன். அவளையும் அவளது தகப்பனரையும் அவமரியாதையாக நடத்தினல், அவர்கள் காலதாமதமின்றி தீவை விட்டு வெளியேறி விடுவார்கள் என்பது அவனுடைய கருத்து.



இரு காதலர்கள்

''பஹாமா பாதை'' என்ற படத்தில் நடிக்கும் மாடிலின் கரோலும் ஸ்டர்லிங் ஹேடனும்

அந்தத் தீவுக்குப் புதிதாக டெல்ப்ரிட்ஜ் வந்ததன் காரணத்தை அத்தீவு வாசிகள் அறியாமல் ஆச்சரியப்பட்டனர்: ஆகவே டெல்ப்ரிட்ஜ் போடும் உத்தரவுகளை எல்லாம் அவர்கள் புறக்கணித்து வந்தனர். அவர்களது தலைவனுக்கும் டெல்ப்ரிட்ஜுக்கும் ஒரு நாள் ஒரு தகராறு சம்பவிக்கிறது. அவ்வளவு தான் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டு விட்டனர்.

ஒரு நாள் அட்ரியனின் தாயார், கரோலிடம், அவள் தன் பிள்ளையிடம் உறவு கொள்ளக்கூடாது என்றும் அவனைப் பின் தொடர்ந்து செல்லக் கூடாது என்றும். அவன் ஏற்கனவே விவாகமானவன் என்றும் கண்டிப்பாகக் கூறுகிருர். இதைக் கேட்டவுடன் கரோல் திடுக்கிட்ட போதிலும், அது மிகவும் தாற்காலிகமானதாகவே இருந்தது: அட்ரியன் தன்னுடன் நெருங்கிப் பழகாததற்கு இது காரணமாக இருக்கக் கூடுமோ என்று சந்தேகம் கூட அவளுக்கு உண்டு, ஆகவே அது முதற்கொண்டு அவன் நிம்மதியாக இருக்கக் கூடாது என்று அவள் முடிவு பண்ணி விடுகிருள். அட்ரியன் தன்னைக் காதலிக்கிருன் என்பது அவளுக்குப் பரிபூரணமாகத் தெரியும். அதை அவனே ஒப்புக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும் என்று அவள் கங்கணம் கட்டிக்கொள்கிருள்.

ஒரு சமயம் கரோலும் அட்ரியனும் தனிமையாகத் தீவில் இருக்கவேண்டிய சந்தர்ப்பம் வந்தபோது இந்த காதல் நாடகம் உச்சஸ்தாயியை எட்டுகிறது. பிறகு ஸால்ட் கீ தீவு ஒரு பெரிய மனோரம்யமான நகரமாக மாறுகிறது: அட்ரியனின் தாயார் இறக்கிருள்: டெல்ப்ரிட்ஜை தீவு வாசிகள் அபகரித்துக்கொண்டு எங்கோ போய் விடுகின்றனர். இதற்கப்புறம் பிரமிப்பும் ஆவலும் அதிகரிக்கின்றன; கூடவே காதல் நாடகமும் தடையின்றி முன்னேறுகிறது,

இந்த அத்புத படத்தில் மாடிலின் கரோல், ஸ்டர்லிங் ஹேடன் முதலியோர் திருப்திகரமாக நடிக்கின்றனர். இப்படம் நகரில் எல்பின்ஸ்டன் தியேட்டரில் விரைவில் காட்டப்படும்.



''ஐ வேக் அப் ஸ்க்ரீமிங்'' என்ற 20-ம் செஞ்சுரி பாக்ஸ் படத்தில் ஒரு காட்சி. கரோல் லாண்டிஸ், விக்டர் மச்சூர், பெட்டிக்ராபிள்.

தமிழ் நூல்கள்.

ஸ்வாத்னலிகெட்	0	10
கலா சேகரன்	1	2
லோகமான்ய திலகர்	0	8
குழந்தைக்கட்டி	1	4
உலகரகசியம்	1	0
அசலாம்பிகை	2	4
இரஞ்சிதமாலா	0	8
ஜகஜ்ஜாலன்	1	12

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

6

காதற்கணிகை தானே!

★

வ. வேணுகோபாலன்

விடியற் காலத்து இருளிலேயே, ஸத்துகன் தன் மாளிகைக்கு வந்து விட்டான். பொழுது விடியச் சிறிது நாழிகை இருந்தது. இணைபிரியாக் காதலியாகிய சயந்தியின் வடிவம் அவன் உள்ளத்தை விட்டு அகலவில்லை. 'பத்திரையை, நீ காதலித்தது பெரும் பாதகமன்றோ? பேதை-கள்ளங் கபடற்ற அவளை வஞ்சித்துவிட்டாயே! பின்னால் விளையப் போகும் பெருந்துன்பங்களை நீ அறியாய். காதற்கணிகைதானே என்று என்னை எண்ணிவிட்டாயா? இது நியாயமா?" என்று சயந்தி தன்னைக் கேட்பதுபோல் தோன்றிற்று அவனுக்கு.

ஸத்துகன் மனத்தில் உதித்த எண்ணங்கள்

அறையில் அமர்ந்தவண்ணம் சிந்தித்திருந்தான். பொழுது புலர்ந்து நீண்ட நாழிகை ஆகி விட்டதைக் கூட அவன் அறியவில்லை. சயந்தியை வஞ்சித்துத்தான் செய்யத் தகாத காரியத்தைச் செய்து விட்டதாக எண்ணி அவன் மனம் கலங்கியது. ஆனால், பத்திரையைப் பற்றி அவன் நினைக்கும்போது 'அவளது மோகப் பார்வை, அன்பு நிறை இன்பமொழி, மாந்தளிர் மேனி, பிடியின்மென்னடை, இளமையின் வளமிகு இன்பம், ஆ! அந்தப் புன்னகையில் பட்டமரம் கூடத் தளிர்க்குமே! கடைக்கண் நோக்கில் உலகமெல்லாம் மயங்குமே! ஆம், அவளது, மலரினும் மெல்லிய தளிர்க்கரங்களைத் தீண்டுமளவில் தோன்றும் உணர்ச்சி-இன்பமே இன்பம்! ஆ! அந்தப் புன்னகை மென்மொழியாள், எளிதில் ஒருவனுக்குக் கிட்டுதற்கு உரியவளா? அவள் என்னை விரும்பியது நான் செய்த புண்ணியப் பயனே! அவளை நான் மணந்து கொள்வதில் தவறு என்ன? உயர்குலத்து உதித்தவள்; குணநிறை செல்வம்; அவள் அழகைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அவள் தந்தை உடன்பட வேண்டியதுதானே இனி ஆகவேண்டியுது? அது என்னால் ஆகாதா? நான் பத்திரையை மணந்து கொள்வதால் சயந்திக்கு என்ன குறைவு? அவள் ஒரு காதற்கணிகை தானே! பத்திரையை மணப்பதால் உலகம்பழிக்காது' என்று இவ்வாறு ஆலோசித்தான்.

ஆனால் அடுத்த கணம், அவன் மனத்திரையில் சயந்தியின் சுந்தர வடிவம் தோன்றியது. 'அன்றொரு நாள், நாடக அரங்கில், ஆடவர் மயங்கிப் பேதுறும்படி நடனமாடிய சயந்தி, தன்னைக் கண்டு காதலித்த அத்தோற்றம்; அவளது நடனத்தையும் எழில் நிறை வதனத்தையும் கண்டு தான் ஏங்கிய அக்காட்சி அன்று தொடங்கி, கற்பகமும் காமவல்லியும் போல் காதலராய்த் திகழ்ந்த தன்மை; ஊடலும் கூடலும் கலந்து உயரின்பம் அளித்த நாட்கள்; உள்ளம் மாறுதிருந்த நிலை, இருவரும் இடையறாது நுகர்ந்த இன்பத்தின் பயனாய்ப் புத்தன் பிறந்த புண்ணிய தினத்தில் தோன்றிய இளங்குழந்தையின் மதிவதனம்!...' இவ்வாறு அவன் அகக்கண்முன் ஒவ்வொன்றாகத் தோற்றமளித்தன பழைய நிகழ்ச்சிகளின் காட்சிகள். 'ஆம், அந்தக் குழந்தையின் எழில் நிறைவதனமும், அருள் பொழி கண்களும் காணுந்தோறும்... காண நினைக்குந் தோறும் இன்பம் அளிப்பன! சயந்திக்கும் எனக்கும் மகிழ்வூட்ட வந்த இன்பக்கனி அல்லவா அக்குழந்தை! அவ்வின்பக்கனி இருக்கையில் சயந்தியின் தொடர்பு- உயிரோடொன்றிய காதல்-எளிதில் அற்றுவிடுமா? அந்தக் கிளிமொழியாளைத்தான் பார்க்காதிருக்க என்னால் இயலுமா? எழு பிறப்புந் தொடர்ந்த காதலுடையாளை யான் எழுபிறப்பும் மறவேன்! மறவேன்!' என்று உறுதி கூறியது அவன் மனம். ஒருபுறம்பத்திரை ஒருபுறம் சயந்தி-இவ்வாறு அவன் மனம் ஊசலாடியது.

ஊழ்வினையின் செயல்

இளமயிற்சாயலாளாகிய பத்திரை மீது காதல் வளர்ந்து கொண்டேயிருந்தது ஒரு புறம்: காதற்கணிகையாகிய சயந்தியின் அன்புப்பிணை மேன்மேலும் வலிவுற்றுக் கொண்டே இருந்தது ஒருபுறம். ஆனால் அது அற்று விடுமோ என்ற பயமும் இருந்தது. காதலின் தன்மையை—தத்துவத்தை, உணராதவன்தானே ஸத்துகன்! பகுத்தறிவுடையவன் இவ்வாறு நடந்துகொள்வானா? உண்மை! பாவம் இருக்குமிடத்தில் பகுத்தறிவு எங்கே இருக்கும்? ஆனால் ஸத்துகன் பகுத்தறிவுடையவன்தான்; பாவமும் அவனிடம் குடிகொண்டிருந்தது என்று சொல்வதற்கில்லை. இருக்கலாம்; இவ்வாறு அவன் நடந்து கொண்டதை ஊழ்வினையின் செயல் என்றே கூறவேண்டும்; அவ்வாறின்றேல் பத்திரையின் காதல் வலையில் அவனுக்கு ஏற்படுமா? பின்னே நிகழப்போவதை முன்னே அறிந்திருந்தால், அவன் பத்திரையைக் காதலித்திரான். அவளும் காதல் கொள்ளாள். இனி அதைப்பற்றி நினைத்து என்னபயன்?—துன்பத்திற்கு விதை விதைத்தாயிற்று. விதியை வெல்லும் மதியுடையவனாய் இருந்தால் பின்னே நிகழப்போகும் துன்பத்தை விலக்கிக்கொள்ளலாம். ஆனால், அவ்வாறு நிகழவில்லையே!

இந்நிலையில் ஸத்துகனின் மாளிகை வாசலில் பெரும் ஆரவாரம் கேட்டது. துக்கத்தில் ஆழ்ந்திருந்த ஸத்துகன் அமைதியாக எழுந்து கீழே பார்த்தான்.



இளமைந்தனின் சிவந்த கன்னங்களை முத்தமிட்டு மேலும் சிவக்கச் செய்தனர் சயந்தியும் ஸத்துகனும்.

"ஓம் நமோ புத்தாய! புத்தம் சரணம் கச்சாமி!" என்று கோஷம் உண்டாயிற்று. உடனே விரைவாக மேல் மாடத்திலிருந்த கீழிறங்கினான். வாசலில் நாற்றுக்கணக்கான பௌத்த பிக்ஷுக்கள் நின்றனர். 'அவர்கள் துறவுகோலத்துடன் விளங்கினர். கழுத்திலிருந்து பாதம்வரை மூடிய ஆடை கைகளில் கமண்டலுவும், தாமரை மணிமாலையும் பாதங்களில் பாதரக்ஷைக் கட்டைகள்' இத்தகைய வடிவத்துடன் புத்த ஸ்மரணம் செய்தவண்ணம் நின்றனர். ஸத்துகன் அவர்களை அழைத்து உள்ளே உட்காரச் செய்து உபசரித்தான். பின்னர் பாலக பிக்ஷுவைத் தனியே அழைத்துக் குறிப்புச் செய்தான். உடனே பாலகன் விருப்பப்படி யாவரும் புத்த ஸ்மரணம் செய்துகொண்டு பௌத்த சங்கத்தை நோக்கிச் சென்றனர். பாலகபிக்ஷு மட்டிலும் ஸத்துகனுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

பிக்ஷுக்கள் மந்திரம்

பாலகபிக்ஷு, ஸத்துகனின் உயிர்த்துணைவனான பாலகன் என்பவனே. அங்கே வந்த பிக்ஷுக்கள் யாவரும் ஸத்துகனுடைய அன்பிற்குரியவர்களே. அல்லாமல் அவன் ஆதரவில் இருப்பவர்கள். அவன் 'ஸத்துகமந்திரம்' என்னும் பெயரால் பௌத்த சங்கம் ஒன்றை நிறுவினான். அதில் இருப்பவர்களே அங்கு வந்த பிக்ஷுக்கள். அவர்கள் யாவரும் அவனுடைய பௌத்த கொள்கைகளைப் பின்பிற்றியவர்கள். அந்தப் பௌத்த சங்கத்தில், 'புத்தமித்ர அடிகள்' என்னும் மஹா பிக்ஷு இருந்தார். அவர் நாள்தோறும் பௌத்மதத்தைப் பற்றிய அறவுரைகளைக் கூறுவார். அவர் ஸத்துகமந்திரத்திலிருக்கும் பிக்ஷுக்களுக்குக் குரு. பிக்ஷுக்கள் யாவரும் நகர்வலம் செய்கையில் ஸத்துகன் மாளிகைக்குச் சென்று அவனைப் பார்த்துப் போவார். அவ்வாறே அன்றும் அவர்கள் வந்து சென்றார்கள்.

பௌத்த சங்கத்து நிகழ்ச்சிகளைப்பற்றிப் பாலகன் ஸத்துகனிடம் கூறினான். ஒவ்வொரு விஷயங்களையும் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான் ஸத்துகன்:

"பாலகா, இளந்தத்தனைப் பற்றிக் கவனித்தாயா?"

"நாள் தோறும் கவனித்து வருகிறேன். நேற்று புத்தமித்திர அடிகளின் தருமோபதேசத்திற்கு இளந்தத்தனும், அவன் நண்பன் அச்சனும் இன்னும் பலரும் வந்திருந்தனர். அரசனுடைய பரிவாரத்தினர் பலரும் வந்திருந்தார்கள்"

"எதற்கு? ஒற்றறிவதற்கா?"

"ஆம்; நான் கவனித்தேன். இளந்தத்தனும் அச்சனும் மறைந்து நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். ஒற்றறியவே வந்தனர். நான் அதற்குத் தக்கவாறு ஏற்பாடு செய்து விட்டேன். தருமவுரை முடிந்தவுடன் அவர்கள் சென்றுவிட்டார்கள்"

"புத்தமித்திரர் எதைப்பற்றிக் கூறினார்?"

"ஸ்ரவம் துக்கம், என்னும் விஷயத்தைப்பற்றித்தான். அவர் மொழிகளைக் கேட்டு யாவரும் மெய் மறந்திருந்தனர். எல்லோரும் அமைதியாகக் கேட்டுவிட்டுப் புத்தமித்திரரைப் போற்றிப் பணிந்து சென்றனர். ஆனால் இளந்தத்தன் மட்டிலும், நமது சங்கத்தின் இடங்களையும், பிக்ஷுக்களையும், பிக்ஷுணிகளையும் உற்று உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்"

"இனி, அவன் வந்தால் சங்கத்துக்குள் புகாதபடி தடை செய்துவிடு; அவனை வராவிட்டால், பல விபரீதங்கள் உண்டாகும். அவனைப்பற்றி மிகவும் கவனம் செலுத்த வேண்டும்"

"அப்படியே செய்கிறேன். அவனை அடக்கிவிடுவதற்கும் வழி தேடுகிறேன்"

பத்திரை பற்றிய முடிவு என்ன?

"வழி என்ன? 'காளன் யார்?' என்பதைப்பற்றி அவன் ஏன் ஒற்றறிகிறான்? காளன் [illegible] கொலையாளியாம்— இவ்வாறு என் தந்தை செவிக்கும் ஓதியிருக்கிறான். பௌத்த சங்கத்தைப்பற்றிப் பலவாறு கோள் கூறியிருக்கிறான். ஆதலால், நாம் எப்போதும் செய்யும் வழியை இவனுக்கும் செய்து விட வேண்டும். நம் சங்கத்தார்களையும், தாபஸப் பெண்களையும் தக்கவாறு நடந்து கொள்ளும்படிச் செய்துவிடு. என் கருத்தைப் புத்தமித்திர அடிகளுக்கும் கூறிவிடு"

"அவ்விதமே செய்கிறேன்; ஒன்று கேட்டுக்கொள்கிறேன்"

"என்ன?"

"தாங்கள் பத்திரை விஷயமாக என்ன முடிவு செய்தீர்கள்?"

"ஏன்? அவள் தந்தையின் உடன்பாடு பெற்று மணம் புரிந்துகொள்வதென்றே உறுதி செய்தேன்"

"அப்படியானால்..."

"என்ன?"

"சயந்தியின் கதி?"

"அவளைப்பற்றி என்ன? காதற் கணிகைதானே அவள்! எப்போதும்போல் என் ஆதரவு அவளுக்கு இருக்கும். தவிர, பத்திரையின் மணத்தைப்பற்றி அவளிடம் கூறப் போவதும் இல்லை"

"அவள் உணர்ந்தால்?"

"உணர்ந்தால் என்ன? உண்மையை ஒப்புக்கொள்வதில் தவறு உண்டா?"

"சயந்தியின் அன்பையும் மனநிலையையும் உணர்ந்த தாங்கள் இவ்வாறு செய்வது நியாயமா? அவள் மனம் வருந்தினால்......"

"பாலகா, அதை மறந்துவிடு. என் மனம் பத்திரை வசம் பறிபோய் விட்டது. எவ்வாறேனும் அவளை மணந்தே கொள்வேன். இனி மேல் நடப்பதைக் கவனி"

"அப்படியே நான் சென்று நாளைக்கு வருகிறேன்"

கடும் வெயிலில் புறப்பாடு

ஸத்துகனிடம் விடைபெற்றுச் சென்றான் பாலகபிக்ஷு. ஏவலாளர் ஸத்துகனுக்குப் பணிவிடைசெய்வதற்கு ஆயத்தமாயிருந்தனர். ஸத்துகன் விரைவில் எழுந்து நீராடிப் புத்தனைத் தொழுதான். உணவருந்திய பின் சிறிது நாழிகை அமைதியாக அமர்ந்திருந்தான். அப்போது கதிரவன் வானப் பரப்பின் நடுநிலைக்கு வந்து விட்டான். படை பதைக்கும் வெயில். ஸத்துகனுடைய நேர்மைக்கு மாறான கொள்கைகளையும் செயல்களையும் கண்டு கொதித்து வெம்புகின்றவன் போல் தோன்றினான் சூரியன். கனற்பொறி பறப்பனபோன்று இருந்தது வெயிலின் வெம்மை. கண்கண்ட தெய்வமாக விளங்கும் அவனைக்கூட அவ்வேளையில் கண்டு பார்க்க இயலாது. அவ்வேளையில் ஸத்துகன் குதிரை மீது உலாப்புறப்பட்டான். விண்ணை அளாவ, உயர்ந்தகன்ற கொடிநெடு மாடங்களும், மாளிகைகளும் இருபுறம் விளங்கும் வீதியில் வேகத்துடன் சென்றது ஸத்துகன் குதிரை. வீதியில் இயங்குபவர் குதிரையின் வாயுகதியைக் கண்டு பிரமிப்புற்றனர். கனற்பொறி பொழியும் வஜ்ஜிரக் குடம் போல் சூரியன் விளங்கியமையால் மாந்தரின் கூட்டம் சிறிது குறைவாகவே காணப்பட்டது. அவரவர் ஆங்காங்கே உணவருந்திக் களைப்பாறியிருந்தனர். வெயிலின் வெம்மை ஸத்துகனுக்கு வெம்மையாகத் தோற்றவில்லை.அதைப்பொருட்படுத்தவில்லை. ஆனால் அவன் மனத்தில் சயந்தியின் பிரிவு என்னும் கனற்பொறி கொதித்து நான்கு புறமும் புகைந்து கொண்டிருந்தது. வேறொரு புறம் பத்திரை மீது கொண்ட ஆருக் காதலின் வெம்மை கனிந்துகொண்டிருந்தது; அதனால் அவன் மனோவேகத்துடன் புறப்பட்டுச் சென்றான். தான் புறப்பட்டுப் போகும் இடத்தைப்பற்றி முதலில் அவனுக்குத் துளிக்கூடச் சிந்தையில்லை. புறத்து உலாவும் உயிராகிய சயந்தியின் அன்புப்பிணை-அவனை அவளிடம் இழுத்துச் சென்றது.

அவன் உள்ளக்கிளர்ச்சியையும், அவனுக்கும் சயந்திக்கும் உள்ள அன்புப்பிணைப்பையும் அவன் குதிரைகூட அறிந்திருந்தது போலும்! அவ்விதம் இல்லையேல் அவன் மனோவேகத்திற்குச் சமமாக, சயந்தியின் மாளிகையை நோக்கி அது செல்லுமா? சில விநாடிகளில் பலவீதியைக் கடந்தாயிற்று. 'எவ்வளவு விரைவு! எவ்வளவு விரைவு! இது என் மனத்தின் வேகமா? குதிரையின் நடை வேகமா?' என்று ஸத்துகன் கூட திக்பிரமை கொண்டான். குதிரை நின்றதுதான் அவனுக்குத் தெரியும். அவன் கண்களை அவனாலேயே நம்பமுடியவில்லை. கணிகையர் வீதியில், சயந்தியின் மாளிகையில் அவன் நிற்கிறான் என்பதை மேகத்தின் சிறு நிழல் அம்மாளிகை மீது படர்ந்த போதுதான் அவனால் அறிய முடிந்தது. விரைவில் கீழிறங்கி மாளிகை வாசலை அடைந்து கதவைத் தட்டினான். தானாகவே கொட்டகைக்குள் சென்று மெல்ல மெல்ல மூச்சு வாங்கியது குதிரை. அப்போது தாழ்ப்பாளை அகற்றிக் கதவைத் திறந்து நின்று காட்சியளித்தவள் யார் தெரியுமா? 'காதற்கணிகைதானே' என்று ஸத்துகனால் இகழப்பட்ட காதலி-சயந்தியே! ஸத்துகனைக் கண்டதும் பிரமித்து நின்றாள் அவள்.

'வாருங்கள் வாருங்கள்'

"உள்ளே வாருங்கள்; இந்தக் கொடும் வெய்யிலில், ஏழையேன் வீட்டிற்கு வர, இவ்வளவு கருணையா? வாருங்கள் உள்ளே;" என்று கூறி அவன் கரங்களைப் பிடித்து அழைத்துச் சென்றாள். ஸத்துகன் வாய் திறவாமல் மௌனம் சாதித்தான். 'களைப்பு நீங்கட்டும்' என்று எண்ணி அவனுக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்தாள். பூவாலாக்கிய மதுவைப் பொன் கிண்ணத்தில் ஊற்றித் தன் தளிர்க்கரத்தால் அளித்தாள். அதை அருந்தியவுடன் உள்ளம் குழைந்தது ஸத்துகனுக்கு; 'என்ன இன்பம்! என்ன அன்பு!' என்று எண்ணிக் குளிர்ந்தது அவன் மனம். ஆறுதலடைந்தவளாய்ப் பெருமூச்சு விட்டாள் சயந்தி. உள்ளத்தில் வெம்மை மறைந்து குளிர் நிறை இன்பம் துளும்புவது போலிருந்தது அவனுக்கு.

"முகம் கறுத்து விட்டதே! ஆ! எவ்வளவு வியர்வை! ஏன் இவ்வளவு கொதிப்பு? இந்தக் கொடும் வெயிலில் ஏன் இரமம்?" என்று கூறிக்கொண்டே, குளிர் காற்று அளிக்கும் சந்தன ஆலவட்டத்தால் (விசிறியால்) மெல்ல வீசினாள்.

"ஆம்; வெயிலின் கொதிப்புத்தான்" என்று கூறிப் பூவணை மீது அப்படியே சாய்ந்தான். உண்மையில் அவனுக்கு களைப்புத்தான். அறிவுகூட சோர்ந்திருந்தது!

"வெயிலுக்கு முன்பே வந்துவிடக் கூடாதா?......ஏன்...... நேற்று முழுதும்..." என்று கூறிக் கொண்டே ஸத்துகன் பாதங்களை மெல்ல வருடிக் கொண்டிருந்தாள். அப்போதுதான் அவள் வதனத்தை ஸத்துகன் நோக்கினான்; உடனே சரேலென்று எழுந்து உட்கார்ந்தான். அவன் கண்களில் விறுவிறுப்புத் தோன்றியது. துணுக்குற்றவனாய், "சயந்தி, ஏன் இந்த அலங்கோலம்? உன் முகம் இவ்வளவு வாட்டமுறக் காரணம் என்ன? ஒரு நாளிரவு நான் இல்லாவிட்டால், இத்துணை வருத்தமா? பனியால் கருகிய தாமரை மலர் போல் உன் முகம் வாடி விட்டதே!"

"ஆம்; சூரியன் இல்லாமல் பனி மிகுதியானால் தாமரை கருகி வாடாதா? ஆனால் சூரியன் தோன்றியவுடன் பனியும் மறையும்; வாட்டமும் நீங்கும்"

"நான், சூரியனைப் போல் வெம்மை அளிப்பவனா? அப்படியானால்:..."

"தாமரையை மலரச் செய்யும்போது, தாங்கள் எப்படி வெம்மையைத் தருபவர் ஆவீர்கள்? அல்லாமல், சூரியனின் வெம்மையைக் கூடத் தாமரை தாங்கிக் கொள்ளும். அது கருகி வாடாது. ஆனால் சூரியன்

(14-ம் பக்கம்)

திட்டமான வாழ்க்கை

★

வ. ரா.

சீக்கிரமாக வருவதாக நேற்று சொல்லி விட்டுப் போன நண்பர் குறிப்பிட்ட காலத்தில் வரவில்லை. என்ன காரணமோ என்று நான் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், அவர் தலையை நீட்டினர். ஏன் இவ்வளவு நேரம் என்று கேட்டேன்.

நண்பர்:—தலை தப்பினது தம்பிரான் புண்ணியமாகப் போய் விட்டது. வீட்டிலே விறகு இல்லை. விறகு கடையிலும் விறகு இல்லை. சர்க்கார் திட்டத்தின்படி அந்தக் கடைக்கு, அரை மணி நேரத்துக்கு முன் தான், விறகு வந்தது. அந்த விறகை வாங்குவதற்குள், எத்தனை பேருக்கு, ரத்தக் காயம்! என்ன ஸார்! நம்ம தேசத்திலே விறகுப் பஞ்சம் ஏற்படுகிறது என்ருல் அதற்கு அர்த்தமே இல்லையே!

நான்:—இதற்கு மட்டுமா அர்த்தமில்லை? இன்னும் எத்தனையோ சம்பவங்களுக்கு அர்த்தமே கிடையாது. இவைகளையெல்லாம் பற்றி யோசனை செய்யாமல், 'பரலோகம், பரலோகம்' என்று ஜபம் செய்து கொண்டே, நம்மவர்கள் இருந்தால்; இந்த உலக சம்பந்தமான எல்லாவித நுணுக்கங்களையும்பற்றி, திறம்பட யோசிப்பவர்கள் எவரும், நமது தேசத்தாரை அடிமைப்படுத்த நினைப்பதில், என்ன ஆச்சரியமிருக்கிறது?

நண்பர்:—உங்களுக்கு சதாகாலமும் ஹிட்லரையும் டோஜோவையும் பற்றித்தான் காப்ரா!

நான்:—எனக்கு காப்ராவே கிடையாது. சரியான முறையில் வாழ்க்கை நடத்தத் தவறியதால்தான், இன்றைக்கு, நம்மவர்கள் அடிமைகளாக இருக்க வேண்டியிருக்கிறது. விறகுப் பஞ்சம் முதல் எல்லாப் பஞ்சங்களுக்கும் நமது அடிமை வாழ்வுதான் காரணம்.

நண்பர்:—நமக்கு சுயராஜ்யம் இருந்தால், இப்பேர்ப்பட்ட பஞ்சம் எதுவும்வராது என்று சொல்லுகிறீர்களா?

நான்:— கண்டிப்பாய் சொல்லுகிறேன். பிரிட்டனை எடுத்துக் கொள்ளும். நம்ம தேசத்தில் இருக்கும் ராணுவத்தை விட, அங்கே அதிகமாயிருக்கிறது. ராணுவத் தேவை என்ற சாக்கிலே, சாதாரண ஜனங்களுக்கு, இந்த மாதிரி கஷ்டங்கள் ஏற்படவில்லை. பிரிட்டனில் வசிக்கும் ஜனங்கள் அத்தனை பேருக்கும் காணும்படியாக, உணவுப் பொருள்கள் அந்த தேசத்தில் விளையவில்லை. என்ருலும் இந்த யுத்த நெருக்கடி காலத்தில் கூட, அந்த நாட்டில் விறகுப் பஞ்சம், உணவுப் பஞ்சம் முதலிய பஞ்சங்கள் ஏற்படவே இல்லையே, காரணம் என்ன?

அடிமைகள் அல்ல

நண்பர்:—நீங்கள் தான் சொல்லுங்களேன்?

நான்:—பிரிட்டனில் வசிப்பவர்கள் அடிமைகள் அல்ல. அவர்கள் எதிரியை எதிர்த்துப் போராடுவதில் நம்பிக்கை கொண்டவர்கள்: உழைப்பில் நம்பிக்கை கொண்டவர்கள். அவர்களுடைய பிரதம மந்திரி சர்ச்சில் என்ன சொன்னர், தெரியுமா?

நண்பர்:—சொல்லுங்கள்.

நான்:—பிரான்ஸிலிருந்து பிரிட்டிஷ் படைகள் 'டன்கர்க் விபத்து' என்ற கொடிய ஆபத்திலிருந்து தப்பி வந்த பின், சர்ச்சில் சொன்னர்:— "ஏ! பிரிட்டிஷ் மகா ஜனங்களே! உங்களுக்கு நான் 'வெற்றி' வாக்கு கொடுக்க முடியாது. உழைப்பு, தியாகம், கஷ்டம், ரத்தம்—இவைகளைத்தான் வாக்கு கொடுக்க முடியும். எதிரிக்கு, முதுகு காட்டி ஓடுவது என்பது ஆங்கிலோ-ஸாக்ஸன் கும்பலின் இயற்கை அல்ல."

நண்பர்:—கம்பீரமான சொற்கள் இவைகள்! சர்ச்சில், பிரிட்டனை, அபாயத்திலிருந்து, இதைச் சொல்லித்தான்; காப்பாற்றினர். உண்மை!

நான்:—இந்தமாதிரி ஆபத்து நம்ம தேசத்துக்கு வருவதாக வைத்துக்கொள்ளும். கீதாச்சாரியன் கண்ணனை விட்டுவிடும். வேறு பெரியார்கள் என்ன சொல்லியிருப்பார்கள் தெரியுமா?

நண்பர்:—நீங்கள் தான் சொல்லணும்!

நான்:—இப்பொழுது நம்ம தேசத்துக்கு போதாத காலம். வேளையும் கூறும் சரியாக இல்லை. எதிர்த்துப் போராடினுல், அனுவசியமாக ரத்தச் சேதம் தான் ஏற்படும். என்ன புண்ணியம்! போகிற உயிர்களிலே, ஒரு உயிரை திருப்பிக் கொண்டு வரமுடியுமா? சிருஷ்டிக்கிற கடவுளுக்குத்தான், உயிரைக் கொண்டு போகும் பாத்தியம் உண்டு. நம்ம தேசத்தாரின் கைகளில் ரத்த வாடை அடிக்கலாமோ!

நண்பர்:—உங்கள் எதிர்க்கக்ஷியை கேவலமாக வர்ணிப்பதில் நீங்கள் ராஜா!

நான்:—ஸ்வாமிகளே! துளிக்கூட, நான் பிசகு சொல்லவில்லை. நம்மவர்களின் தத்துவம், இந்தமாதிரியான தாரை வழியாகத்தான் வழிந்தோடிக்கொண்டிருந்தது. இதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். நான் மேலே சொன்னேனே, அந்த போலி தத்துவத்தை மெய்ஞ்ஞானமாகக் கொண்டாடி, உமக்கும் எனக்கும் ஏனையோருக்கும், இப்பொழுது விறகு பஞ்சத்தைக்கூட உண்டாக்கி விட்டார்கள் நமது 'அரை குன்ற' யோசனையாளர்களான பண்டைப் பெரியவர்கள்.

நண்பர்:—இப்படித்தான் நேர்ந்தது என்று நீங்கள் சொல்லுகிறீர்களா?

சரிந்த வகை

நான்:—நம்மவர்களின் வாழ்க்கையும் யோசனைத் திறனும் செயல் வல்லமையும் சரிந்து விழுந்த வகையை, நான் அறிந்த மட்டில் சொல்லுகிறேன், கேளும்.

நண்பர்:– அதற்காகத்தான் வந்திருக்கிறேன்! இப்பொழுதும் தயாராய்க் காத்துக் கொண்டிருக்கிறேன்!

நான்:—பூரண அஹிம்சையும் பரிபூரண அன்பும் புத்தன், ஏசு, காந்தி போன்ற மகான்களுக்குத் தான் சாத்தியப்பட்டவை. படைத்தவனுக்குத்தான் அந்த உயிரைக் கொண்டு போகும் பாத்தியம் உண்டு என்று சொல்ல, அவர்களுக்குத்தான் உரிமை உண்டு. மற்றவர்கள் சொன்னல், அதற்கு அர்த்தமில்லை. முதலில் அர்த்தமில்லாமல் இருப்பது, நாளாக நாளாக், வஞ்சகமாக முடியும்.

நண்பர்:—எப்படி?

நான்:—போன உயிர்களில் ஒரு உயிரைத் திருப்பிக் கொண்டு வர முடியுமா என்று மகாத்மா காந்தி கேட்பதில், சாவைத் துரும்பாக மதிக்கும் காந்தி கேட்பதில், ஜீவகாருண்யம் நிறைந்திருக்கிறது. அதையே, ஜப்பானிய வெடி குண்டு வெடித்ததாகக் கேள்விப்பட்டு அலறும் மனிதன் சொன்னல், என்ன அர்த்தம்? ஜீவகாருண்யத்தால், அவன் அப்படிப் பேசுகிருனு?

நண்பர்:—சொல்லிச் சொல்லி, பழக்கத்தால் அப்படி ஒருவன் பேசக்கூடாதா?

நான்:—உயர்ந்த தத்துவத்தை, அடிப்படையான அர்த்தமும் வீர்யமும் இல்லாமல், பழக்கத்தைக் கொண்டு மட்டும், பேசினுல், வல்லமை உண்டாகுமா? வல்லமை இல்லாதவன், 'போன உயிரைத் திருப்பிக் கொண்டு வர முடியுமா' என்ற உண்மையைப் பேசினுல், அது ஜீவகாருண்யத்தால் அல்ல. அது சாகப் பயந்த அவலக்ஷணத்தினுல் என்பது உமக்குத் தெரியவில்லையா?

நண்பர்:—எங்கேயோ கொண்டு போய் ஒடுக்கப் பார்க்கிறீர்களே!

நான்:—உம்மைப் போன்ற நமது சாதுத் தனங் கொண்ட தேசத்தார்களோடு சாமர்த்திய வாதம் செய்ய, நான் பிறக்கவில்லை. உங்களையெல்லாம் ஒடுக்குவதில், ஒரு லாபமும் கிடையாது. இந்தியாவைப்பற்றி அவலமான ஆசையை வைத்துக் கொண்டிருக்கும் அந்நியனை வாதத்தாலோ, வாழ்க்கையாலோ மடக்குவதில், எனக்கு அளவு கடந்த ஆசை.

நண்பர்:-சரி! மேலே சொல்லுங்கள்..

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப்பலன் மாதவாரி எழுத ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்கு பதில் ரூ. 1. வி. பி. அணு 5.
ஜனன கால விவரம் OR எழுதும் நேரம் தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி. S.I

உமது குழந்தை ஈரல் குலைகட்டி பெருத் திருந்தால்

எவ்வித வைத்திய முறையினுலும் குணப்படுத்த முடியாதிருந்த இக்கொடிய நோய், ஓர் அற்புத ஆராய்ச்சி முறையினுல் வைத்தியத் தீர்த்து கட்டப்பட்டு, சென்ற 36 வருஷங்களாக பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை காப்பாற்றியுள்ளது. இந்தியா பூராவிலுள்ள வைத்திய நிபுணர்களால் போற்றப்பட்டது.

ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள்.

'ஈரல் குலைகட்டி முதலியவைகளுக்கு இது ஒரு அற்புத நிவாரணி.
எல்லா மருந்துஷாப்பிலும் கிடைக்கும்.
ஜம்மி வேங்கடரமணய்யா அண்டு சன்ஸ், மைலாபூர் — மதராஸ்.
சப் ஆபீஸ்: கும்பகோணம். பிராஞ்சுகள்: கல்கத்தா, லக்னோ, பம்பாய், பெங்களூர், திருச்சினுப்பள்ளி, விஜயநகரம்.

வெறும் அலங்காரம்தான்

நான்:—இறந்தவர்கள் கட்டாயமாக, மறுபடியும் பிறக்கிருர்கள் என்பது ஹிந்துக்களின் நம்பிக்கை. இதற்கு புனர் ஜன்மத் தத்துவம் என்று பெயர். இந்த தத்துவம் சாகப்பயந்தவனுக்கு, ஒரு நாளும் தைரியத்தை கொடுக்காது. இது ஏட்டில் இருக்க வேண்டியதுதான். இது மேடைப் பிரசங்க விஷயமாகவும் கதாகால க்ஷேப அலங்காரமாகவும் தான் இருக்கும்.

நண்பர்:—இப்படி சொல்லப் போகிறீர்கள் என்று தான், நான் பயந்தேன்.

நான்:—வேடிக்கையைக் கேளும். பூர்வ ஜன்மம் (முன் பிறப்பு) புனர்ஜன்மம் (மறு பிறப்பு) இரண்டும் இருக்கிறதா? அதிலே, புனர் ஜன்மத்தால், கோழைகளுக்கு தைரியம் உண்டாவதில்லை—பூர்வ ஜன்மம் எப்படி உபயோகப்படுகிறது என்று பார்ப்போம்.

நண்பர்:—ஆராய்ச்சி எல்லாம் உங்களைச் சேர்ந்தது. அதன் பயன்—

நான்:-(சிரித்துக்கொண்டு) பயன் உம்மைச் சேர்ந்ததாக இருக்கட்டும். ஒரு காரியமும் செய்ய இஷ்டப்படாத சோம்பேறியும் கோழையும் பூர்வ ஜன்மத்தை, தங்களுக்கு சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிருர்கள்.

நண்பர்:—எப்படி? தெளிவாக எடுத்துச் சொல்லுங்கள்.

நான்:—'பூர்வ ஜன்மாந்திர பலன் இது; இதற்கு நாம் என்ன செய்ய முடியும்' என்று அவர்கள் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து கொள்ளுகிருர்கள்.

நண்பர்:— பூர்வஜன்மமும் புனர் ஜன்மமும் இப்படியா துர்வினியோகம் ஆகணும்?

நான்:-நம்ம மூதாதைப் பெரியவர்களிடம் எனக்கு மதிப்பு இல்லை என்று உளரும் முட்டாளை, நீர் மதிக்க வேண்டாம். கர்மபலன் என்ற அசைக்கமுடியாத இயற்கை உண்மையைக் கண்டுபிடித்த இணையில்லாத மேதாவியான ஹிந்துப் பெரியாரை, (அவர் எப்பொழுதும் வாழ்ந்திருந்தாலும், சரி) நான் அடி பணிகிறேன். கர்மத்துக்கு, பலன் 'இருக்குமாயின், ஈசனுடைய கருணை கூட தேவை இல்லை' என்ற நிகரில்லாத தைரியத்தை ஊட்டக்கூடிய உத்தமமான தத்துவத்தை, மண்ணைக் கவ்வும்படியாக, இந்த தேசத்தில், நம்மவர்கள் செய்து விட்டார்களே! இதற்கு என்ன சொல்லுகிறீர்?

நண்பர்:—நான், சொல்லுவதற்கு என்ன இருக்கிறது?

நான்:—'கர்மத்துக்குப் பலன் உண்டு; நல்ல கர்மத்துக்கு நல்ல பலன் உண்டு; இழிவான கர்மத்துக்கு கேவலமான பலன் உண்டு', என்பதை கண்டு பிடித்த மேதாவியின் இனத்தில் பிறந்தவர்கள், விதி என்றும் வேளை என்றும் அதிருஷ்டம் என்றும் கால பலம் போதாது என்றும் பிதற்றிக் கொண்டு கட்டுண்டு வாழ்வதைப் பார்த்தால், மனதுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கிறது, தெரியுமா?

நண்பர்:—நினைத்துப் பார்த்தால், மனதுக்கு கஷ்டமாகத் தான் இருக்கிறது.

நான்:—கர்ம பலன், புனர் ஜன்மம் என்றவைகளைப் பற்றி எதுவும் தெரியாமலிருக்கும் தேசத்தார் புத்திசாலிகளாகவும் தைரியசாலிகளாகவும் சுறு சுறுப்பாளர்களாகவும் இருப்பதைப்பார்க்கப் பார்க்க, என் மனம் சங்கடப்படுகிறது. நாகரிகத்தில் மட்டம் என்று வாழ்ந்தவர்கள் எல்லோரும் சாம்ராஜ்ய போகத்தை அனுபவிப்பதும் சிரமமில்லாமல் 'பதினுன்கு லோகங்களுக்கும் போய் வந்தவர்களின்' சந்ததியார்கள் எலும்புக் கூடுகளாக வாழ்வதும் காலத்தின் கொடுமை என்ருல் நமது வாழ்க்கை பிரச்னை தீர்ந்து விடுமா?

நண்பர்:–பிரச்னை தீராது தான்.

நான்:–ஸ்வாமிகளே! நீர் நகரத்தில் வாழும் பெரியாராச்சே! கொடி முறுக்கு ஏன்ருல் என்ன என்றுதெரியுமா?

நண்பர்:–தெரியும். அவ்வளவு தூரம் நகர வாழ்க்கை இன்னும் ரத்தத்தில் ஊறிப் போய்விடவில்லை!

நான்:–அப்படியானல், சொல்லும்.

நண்பர்:–கயிற்றில் சிக்கு எடுக்க முடியாத சிடுக்குக்கு கொடிமுறுக்கு என்று பெயர். சரிதானே?

நான்:–சரி; கர்மபலன், பூர்வஜன்மம் முதலியவைகளுக்கு தப்பர்த்தம் செய்து, நம்மவர்களின் வாழ்க்கையில் சில போலி வியாக்கியான கர்த்தர்கள், கொடி முறுக்கை ஏற்றிவிட்டார்கள்: அது, வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் உடைந்து, விபரீத விளைவுகளை உண்டாக்கிவிட்டது.

நண்பர்:–நீங்கள் சொல்லுவது உண்மை என்றே தோன்றுகிறது.

நான்:–அப்படி அரை மனசோடு ஒப்புக் கொள்ளக் கூடாது. நன்ருக யோசித்துப்பாரும்.

நண்பர்:–நல்லது. இன்றைக்குத்தான். கொடுக்கில் விஷமில்லை (சிரிக்கிருர்)

கண்டு பிடித்தது இவர்களே!

கிராமபோன்

எந்த நேரத்தில் வேண்டுமானுலும் எந்த சங்கீத வித்வானுக இருந்தாலும் அவரது இன்னிசையைக் கேட்பதற்கு 'வசதியாக 'கிராம போன்' இயந்திரம் அமைந்திருக்கிறது. இந்த இயந்திரத்தை டி. ஏ. எடிஸன் என்பவர் கண்டுபிடித்தார். 1876-ம் ஆண்டில் இது கண்டுபிடிக்கப் பட்டதாம்.

★

ஹார்மோனியம்

சாரீரம் இருப்பவர்கள், இல்லாதவர்கள் முதலிய எல்லோரும் நிஷ்கவலையாக உபயோகிக்கக்கூடிய இந்த ஹார்மோனியம் ஏறபட்டு இன்றைக்கு 100 வருஷங்களுக்குமேலாகிவிட்டன. இது 1779-ம் வருஷத்தில் கோபன ஹேகன் என்ற ஊரில் கண்டுபிடிக்கப்பட்டது. கிறிஸ்டியன் சாலிலெப் க்ராப் ஸென்ஸ்டன் என்பவர் இதைக் கண்டு பிடித்தார்.

★

'லைப் போட்'

பாறைமீது மோதியோ அல்லது எதிரியின் டார்பிடோ குண்டுக்கு இரையாகவோ போகும் கப்பல்களிலிருந்து தப்புவதற்காக 'லைப் போட்' என்ற ஆபத்துச் சகாயப் படகுகள் உபயோகமாகின்றன. 'லைப் போட்' கண்டுபிடிக்கப்பட்டு இப்போது 150 வருஷங்களாகிவிட்டன. லைனல் லூகின் என்பவர் இதைக் கணடுபிடித்தார்.

அட்டைப் படம்

★

திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக ஸ்வாமிகள்.

விவாஹம்.

திருநெல்வேலி வண்ணார்பேட்டை அட்வகேட் ஜெ. வரதராஜய்யங்கார் புத்திரி ஸௌபாக்கியவதி கனகவல்லிக்கும், மைசூர் அட்வகேட் என். ராஜகோபாலய்யங்கார் குமாரர் ஸ்ரீமான் என். வெங்கடேசனுக்கும், (B. E., Engineer, Bhadravadhi) வண்ணார்பேட்டையில் 10—2—43-ந்தேதி புதன்கிழமையன்று விவாஹம் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

தம்பதிகளை ஆசிர்வதித்து வாழ்த்து செய்திகளும் வெகுமதிகளும் அனுப்பப்பட்டன.

ஸ்வாதீன அயர்லாந்தின் அதிர்ஷ்டம்

ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன்

இன்பமும் துன்பமும் அயர்லாந்துக்கு மாறி மாறி வந்திருக்கின்றன. இன்பம் வந்தெய்திய காலத்தில் அது துள்ளிக் குதிக்கவில்லை; துன்பம் வந்துற்ற காலத்தில் அது தலையைக் கவிழ்த்துக் கொண்டு அழ ஆரம்பித்து விடவில்லை. எக்காலத்திலும் ஒரே சீராக இருந்து வந்திருக்கிறது. உயரிய லக்ஷியமுள்ள தேசமானது ஏத்தகைய நிலைமையையும் சமாளித்துக் கொண்டு விடலாமென்ற தைரியமும் அதற்கு எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது. பழைய அயர்லாந்தின் கொள்கை அது தான்; புதிய அயர்லாந்தும் அந்த வழியிலிருந்து பிறழ்ந்து விடப் போவதில்லை.

இந்தப் புதிய அயர்லாந்தை நினைத்துக் கொள்கையில் பழைய கிரீஸின் ஞாபகம் வருகிறது. ஜனங்கள் புத்திசாலிகள், பரஸ்பரம் அவநம்பிக்கையுண்டு; அபிப்பிராய பேதங்களும் அதிகம். இருந்தாலும் தேசத்தை எல்லோரும் ஒரு மனதாக நேசிக்கிறவர்கள். அயர்லாந்து பெருமையுற்றிருந்த காலத்தில் மற்றொரு கிரீஸோவென்றே நினைக்க வேண்டியிருந்தது. பிறதேசங்களைப் பிடித்துக் கொள்வதும் அது அறியாத வித்தையில்லை. பத்து வருஷ காலம் ஐரிஷ்காரர் ஒருவர் இங்கிலாந்தில் ஆட்சி நடத்தினார். ஆனால் காலம் மாறிவிட்டது.

கிரீஸ் சுதந்திரத்தில் நம்பிக்கையுள்ளதாகவே இருந்தது; தான் கேந்திர ஸ்தானத்தில் இருந்து வருவதன் விசேஷத்தையும் அது உணர்ந்திருந்தது. எனினும் ஆத்மாவை அது மறந்து விட்டதால் இன்று ஜீவித்திருந்தும் வாட்டத்துடன் காண்கிறது. அயர்லாந்து ஐரோப்பாவும் அமெரிக்காவும் சந்திக்கும் இடமாக இருப்பதால், கிரீஸுக்கிருந்த பெருமையும் கௌரவமும் அதற்கு முண்டு; முன்னே போகிறவன் கிணற்றில் வீழ்வது பின்னால் வருகிறவனுக்கு திவர்த்தி பிடித்ததாகுமென்பது போல். கிரீஸின் நிலைமைக்குக் காரணத்தை அயர்லாந்து உணர்ந்து, அந்தப் படுகுழியில் விழாமலிருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

கலை ஞானம்

கலை ஞானம் அயர்லாந்தில் அதிகமிருக்கிறது; தொழில் அபிவிருத்தியானது நாட்டின் நிலைமையில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தும். விமெரிக்கிலிருந்து விநியோகிக்கப்படும் மின்சார விசையானது பவுன் முனைக்கும்படிச் செய்யும்; ஹென்ரி போர்டின் மோட்டார் தொழிற்சாலையால் கார்க் நகரமானது மகோன்னத தசையை அடைந்து வருகிறது; காலபேயானது பெரிய விமான சந்தி ஸ்தல கௌரவத்தை வெகு சீக்கிரம் அடையலாம்.

சுவாதீன அயர்லாந்தின் பெருமையைச் சொல்லிவிட்டோம். யுத்தம் அங்கு ஏற்படுத்தியுள்ள நிலையை இனி ஆராய்வோம். சுவாதீன அயர்லாந்து மக்கள் நடுநிலைமைக் கொள்கையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருப்பதில் அதிசயமில்லை. பிரிவினை விஷயத்தில் நேசதேச மனப்பான்மையை ஒட்டியே அவைகளுடைய லக்ஷணத்தை அவர்கள் மதிப்பிடுகிறார்கள். வட அயர்லாந்திலுள்ள ஆறு ஜில்லாக்களில் மதவித்தியாசம் பாராட்டப்பட்டு வருவதை அவர்கள் அறிவார்கள். அங்குள்ள சிறுபான்மைக் கோஷ்டியினரிடம் அவர்களுக்குப் பூரண அனுதாபம். அதனுடன் வெகு சிரமப்பட்டு ரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த புதிய சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டுமென்ற எண்ணமும் அவர்களுக்கு இருக்கிறது. அந்நிய நாட்டினர் காலடி வைத்தால் அவர்கள் போராடுவார்கள். நாட்டுக்காக உயிரையே அர்ப்பணம் செய்ய அவர்கள் தயார். பிறர் சண்டையில் சிக்கிக்கொண்டு உழலக் கூடாதென்றும் அவர்கள் நினைக்கிறார்கள்.

பிரிட்டன் வெற்றியை விரும்புகிறது

சுவாதீன அயர்லாந்தின் உண்மை நிலையை அறிந்தவர்களுக்கு அதன் கட்சி பிடிபடுகிறது. அது தெரியாதவர்களிடையே குழப்பம் தோன்றுவது சகஜம். "உங்களுடைய போரில் நாங்கள் தலையிடப் போவதில்லை" என்று பயங்கொள்ளித்தனத்தினால் அது சொல்லவில்லை. யுத்தத்தின் மூலம் கொள்ளை லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும் அது ஒதுங்கி நிற்கவில்லை. நடுநிலைமையினால் ஏற்படும் கஷ்டத்தை அது அனுபவிக்கிறது. பழைய சம்பவங்களால் பிரிட்டனிடத்திலுள்ள கசப்பையும் அது மறந்துவிடவில்லை. சந்தேகமும் கூடச்சேர்ந்து கொண்டிருக்கிறது. இவைதான் சுவாதீன அயர்லாந்தின்போக்குக்குக் காரணம். மேலும் அவனவன் காரியத்தை அவனவன் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்ற பழைய எண்ணத்தை பிரிட்டன் ஒழித்து விட்டதென்று அது நம்பவில்லை. எனினும் பிரிட்டனின் வெற்றியையே அது விரும்புகிறது. தன்னைச் சிக்கவைக்காமலே அந்த வெற்றியை கிரேட் பிரிட்டன் தேடிக் கொள்ள வேண்டுமென்று அது கருதுகிறது.

அயர்லாந்தின் பிரிவினையே சுவாதீன அயர்லாந்தின் மக்கள் கண்களில் எப்பொழுதும் உறுத்திக்கொண்டிருக்கிறது. ஏன் அல்ஸ்டர் பிரிந்திருக்க வேண்டுமென்று தேசிய வாதிகள் கேட்கிறார்கள்? வட அயர்லாந்திலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸாகி விடவேண்டுமென்று சுவாதீன அயர்லாந்து விரும்புகிறது. ஆனால் பலாத்காரத்தின் மூலமாகவன்றி சிநேக வழியிலேயே அதை ஈடேற்றிக் கொள்ளப்போவதாக யுத்தத்துக்கு முந்தியே டெவெலரா சொல்லிவிட்டார். யுத்தம் ஏற்பட்டால் இங்கிலாந்தைத் தாக்குவதற்கு ஸ்வாதீன அயர்லாந்தை தளமாக உபயோகித்துக் கொள்ள இடங்கொடுக்கப் போவதில்லையென்று 1935-ம் வருஷத்தில் அவர் சொன்னார். அந்த வாக்குறுதியை அவர் இன்றும் காப்பாற்றி வருகிறார்.

அல்ஸ்டர் விரும்பாத நிலைமையில் அதை நிர்ப்பந்தப்படுத்துவது ஜனநாயகமாகுமாவென்று பிரிட்டிஷார் கேட்கிறார்கள். ஆனால் ஸ்வாதீன அயர்லாந்திலிருக்கும் பிராடெஸ்டெண்ட் வகுப்பினரான சிறுபான்மையினரே நாட்டை ஒன்றுபடுத்த வேண்டுமென்று கோருகின்றனர். அதன் மூலம் தங்களுக்கு அதிகச் செல்வாக்கும் சலுகையும் ஏற்படுமென்று அவர்கள் நம்புகின்றனர். இன்றில்லாவிடினும் ஒரு காலத்தில் ஸ்வாதீன அயர்லாந்துடன் அல்ஸ்டர் சேர்ந்து தானாக வேண்டுமென்று அபிப்பிராயம் இங்கிலாந்திலேயே பரவி வருகிறது.

அயர்லாந்தின் பயம்

துறைமுகங்கள் விஷயத்தில் ஸ்வாதீன அயர்லாந்துக்கு கசப்புதான். பிரிட்டன் அவற்றை உபயோகிக்க அனுமதி அளித்தால் தான் யுத்தத்தில் மாட்டிக் கொள்ளுமென்று அது பயப்படுகிறது. கொடுத்து விட்டால் அந்த இடங்கள் திரும்பக் கிடைக்குமென்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லை. யுத்தம் ஆரம்பமாகி 14 மாதங்கள் வரையிலும் துறைமுகப் பேச்சை பிரிட்டிஷார் எடுக்காததை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதற்கப்புறம்தான் 1940 நவம்பர் மாதத்தில் ஐரிஷ் துறைமுக வசதியில்லாதது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் தலையில் தாங்க முடியாத சுமையை ஏற்றி விட்டதென்று சர்ச்சில் கூறினார்.

இந்தத் துறைமுகங்களுக்கு அதிக முக்கியத்தை பிரிட்டன் கற்பிப்பதையும் சுவாதீன அயர்லாந்து ஒப்பவில்லை. தென் பக்க வழியோ உபயோகமில்லை; வட பக்கம் வழியாகவே நேசதேசக்கப்பல்கள் போகவேண்டியிருக்கிறது. அந்த வழியில் தகுந்த பாதுகாப்பு இருக்கிறது. இவ்விதமிருந்தும் துறைமுகங்களைப் பற்றிப் பேசுவது தங்களை யுத்தத்தில் சிக்க வைக்க யுக்தியென்று அவர்கள் வாதிக்கிறார்கள். ஒரு துறைமுகத்தையும் யாருக்கும் கொடுக்க அவர்கள் விரும்பவில்லை. நடு நிலைமையே சுதந்திரத்தின் சின்னமென்பது அவர்கள் கருத்து.

யுத்தத்தால் விளைந்துள்ள நிலை

இருந்தாலும் யுத்தம் ஸ்வாதீன அயர்லாந்தை அதிகம் பாதித்திருக்கிறது. டெவெலரா ஒரு சமயத்தில் சொல்லியது போல் நாற்புறத்திலும் அது அடைபட்டுக் கிடக்கிறது. ஜெர்மன் நீர்மூழ்கிகள் ஒரு பக்கத்தில் திருவிளையாடல்களை நடத்துகின்றன; பிரிட்டிஷ் நிர்ப்பந்தங்கள் மற்றொரு பக்கத்தில் நாட்டைப் பாதிக்கின்றன. கோதுமை, பருத்தி, பெட்ரோல், எஃகு, கம்பளி, கரி, இயந்திரங்கள், காப்பி, தேயிலை இவை போதியவளவு அங்கு இல்லை. 3 லக்ஷம் பேர் தேசப் பாதுகாப்புக்கு பயிற்சி பெற்று வருகிறார்கள். இங்கிலாந்துக்கு அது ஏராளமாக உணவுப் பொருள்களை விற்ற போதிலும் தனக்கு வேண்டிய சாமான்களை அது வாங்கிக் கொள்ள முடியவில்லை.

இடையிலேயே எதிரி ஏஜண்டுகள் ஸ்வாதீன அயர்லாந்தில் வேலை செய்கிறார்களென்று நாம் கேள்விப்படுகிறோம். இது கற்பனையில்லை; ஆனால் மிகைப்படுத்தப் படுகிறது. வெளிச்சிக்கலில் மாட்டிக்கொள்ளும் நிலைமை ஏற்பட நாடு இடங்கொடாது. தகுந்த தலைவர்களும் அதற்கு வாய்த்திருக்கிறார்கள். வேறு என்ன வேண்டும்?

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டைகனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமபப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும், 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR Oil CHOCOLATES

ஏஜண்டுகள்:—
மெஸர்ஸ் சிவராம் & ஸ்வாமி லிமிடெட்,
154, தைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

சிறுவர் பகுதி

பேய்கள் உண்டா?

(டி. எஸ். ஆர்.)

கோபாலனுக்குப் பேய் பூதம் முதலியவைகளைப்பற்றிய கதைகளைக் கேட்பதில் பிரியம். அவனுக்கு அவனது பாட்டி அம்மாதிரியான எத்தனையோ கதைகள் சொல்லியிருந்தாள்.

ஒரு நாள் அவன் தனது அறையில் பேய்களைப்பற்றிய ஒரு கதையைப் படித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு உர்து சொல்லி வைக்கும் ஒரு மௌல்வி வந்து சேர்ந்தார். அவருக்கு பேய்கள் இருக்கின்றன என்ற பூரண நம்பிக்கை. அவன் வாசித்துக்கொண்டிருந்த கதையைப் படிக்கச் சொல்லிக் கேட்டார். அதில் பேய் பிசாசுகள் கிடையாது என்ற விஷயம் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தது.

உடனே அவர்களுக்குள் அவ் விஷயமாகக் கடுமையான சம்பாஷணை நடந்தது.

வருகிற பௌர்ணமியன்று என்னுடன் வரத் தயாராயிரு. பிசாசைக் காட்டுகிறேன். இரவில் பிரேதங்களை புதைக்குமிடத்திற்கு அழைத்துப் போவேன். ஆனால் ஒரு நிபந்தனை. உன்னுடன் கூட யாருமே வரக்கூடாது. வந்தால் பிசாசு கண்ணில்படாது. சம்மதமா? என்றார் மௌல்வி.

கோபாலன் சம்மதித்தான். பௌர்ணமியன்று இரவு மணி 11-க்கு இருவரும் ஒரு சுடுகாட்டின் பக்கமாகப் புறப்பட்டனர். அது ஊருக்கு அரை மைல் தூரத்தில் ரஸ்தாவின் பக்கத்திலேயே இருந்தது.

அப்பிரதேசத்திற்குள் நுழையும்பொழுதே மௌல்வி கோபாலனுக்கு விளங்காத, ஏதோ மந்திரங்களை உச்சரிக்க ஆரம்பித்தார். பிறகு ஒரு சமாதி அருகே சென்று அதற்கு பூஜை செய்து மறுபடியும் ஸ்தோத்திரங்கள் செய்தார். அரை மணி நேரமாக அவர் செய்வதையே கவனித்தவனாய் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தான் கோபாலன். பிறகு ஒரு சமாதியை நோக்கி தமது விரலை நீட்டி 'அதோ சமாதியிலிருந்து பேய் கிளம்பும்' என்றும் அவன் பார்த்துக் கொள்ளலாமென்றும் மௌல்வி சொன்னார்.

கோபாலன் திறந்த கண் மூடாமல் அந்தக் கட்டிடத்தையே கவனித்துக்கொண்டிருந்தான்.

ஒரு வெண்மையான உருவம் சமாதியின் பின்னாலிருந்து மேலே கிளம்பியது. மௌல்வி ஜபிக்க ஆரம்பித்தார். 'பயப்படாதே. கவனமாய் பார்த்துக் கொள்' என்று அவனிடம் மெதுவாகச் சொன்னார்.

கோபாலன் கவனித்துக் கொண்டிருக்கும் பொழுது வேறொரு சமாதியின் பின்னாலிருந்து ஒரு உருவம் வெளிப்படுவது தெரிந்தது. கோபாலன் அதை மௌல்வியின் பூஜைக்குக் கட்டுப்பட்ட இரண்டாவது பேயாகவே எண்ணினான். ஆனால் மௌல்விக்குத் தான் சங்கடம் ஏற்பட்டது. 'இந்த இரண்டாவது பேய் எங்கிருந்து வந்தது?' என்று அவரே கவலைப்படலானார். பயத்தினால் அவர் உடல் நடுக்கமெடுத்தது.

இரண்டாவது பேய் தன் முழு உயரத்தையும் வெளிப்படுத்தி நின்றதும் மந்திரவாதிக்கு அங்கு நிற்கக்கூட முடியவில்லை. ஒரே ஓட்டமாக வெளியே ஓடினார். பாவம் கோபாலன் என்ன செய்வான்! அவனும் அவர் பின்னால் விழுந்தடித்து ஓடினான். முதல் பிசாசு அவர்கள் இருவரையும் துரத்திக் கொண்டு ஓடி வந்தது. இரண்டாவது பேய் எல்லோருக்கும் பின்னால் ஓட்டமாக ஓடியது.

நால்வரும் சமாதி ஸ்தலத்தை விட்டு ரஸ்தாவை அடைந்து ஊரை நோக்கி ஓடினார்கள். வயது சென்ற மௌல்வியும் கோபாலனும் தங்களைப் பிடித்து ஹிம்ஸிக்கவே பூதங்கள் தங்களைத் துரத்துகின்றன என நடுங்கிவிட்டனர். மந்திரவாதி பிரக்ஞையிழந்து தரையில் விழுந்து விட்டார். கோபாலனும் தள்ளாடிப் போய் அவர் மேல் விழுந்து மூர்ச்சையடைந்தான். துரத்திக் கொண்டு வந்த பூதங்களும் அவர்களின் மீது ஒன்றின் பின் ஒன்றாக விழுந்தன. இரவு முழுவதும் அவர்கள் அதே நிலையில் கிடந்தார்கள். ரோட்டில் ஒரே கூட்டம்.

மௌல்வி கோபாலனைப் பார்த்து இரண்டாவது பேயாக வந்தது யார் என்று அறிந்து சொல்லும்படி கேட்டார். அவன் கவனித்ததில் அது தனது வேலைக்காரனே எனத் தெரிய வந்தது. பிறகு அந்த இருவரும் தூக்கி நிறுத்தப்பட்டார்கள். கோபாலன் தன் சேவகனைப் பார்த்து 'நீ இங்கு எவ்விதம் வந்தாய்? விவரமாய்ச் சொல்' என்று கேட்டான்.

வெட்கத்தினாலும் பயத்தினாலும் குனிந்த தலை நிமிராமல் அந்த வேலையாள் "நீங்கள் மௌல்வியுடன் பூதத்தைக் காண சமாதி ஸ்தலத்திற்கு போவதாகப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த எனக்கும் ஆசையுண்டாயிற்று. வேறு யாரும் வரக்கூடாதெனத் தடுத்துவிட்டதனால் நானே இருவருக்கும் தெரியாமல் வருவதற்கு முடிவு செய்துகொண்டேன். நான் நேற்று உங்களுக்குத் தெரியாமல் இடுகாட்டிற்கு வந்து ஒரு சமாதிக்குப் பின் ஒளிந்திருந்தேன். மௌல்வியின் பேய் கிளம்பியதும் அதைக் காண வேணுமென்ற ஆவலினால் எழுந்து நின்று பார்த்தேன். நீங்கள் மூவரும் ஓடுவதைக் கண்ட நானும் பயங்கொண்டு ஓடி வந்து உங்கள் மூவர் மீதும் விழுந்து நினைவற்றுக் கிடந்தேன்" என்றான்.

கோபாலன் முதல் பூதத்தைக் காட்டி 'இது யார்?' என்று கேட்டான். மௌல்வி குனிந்தபடியே 'எனது ஆள் தான்' என்றார். எப்படி வந்தான் என்று கேட்டதற்கு பதில் சொல்ல அவரது நா எழவில்லை. ஆனால் அந்த ஆள் பின்வருமாறு சொன்னான்: 'நான் இவருடைய வேலைக்காரன். எனக்குப் பேயென்றால் நடுக்கந்தான். இரவு வேளைகளில் நான் அப்பக்கம் செல்வதில்லை. தங்களுக்குக் காட்டுவதற்காக என்னைப் பிசாசுபோல் வேடம் தரித்துக்கொண்டு அங்கு மறைந்திருக்க வேண்டுமென்பது என் யஜமானன் கட்டளை. பேயை அவரால் வரவழைக்க முடியாது என்ற தைரியத்தினால்தான் நான் அவரது இஷ்டத்திற்கு உடன்பட்டு வந்தேன். என்னைப்போல் இரண்டாவது உருவம் வெளிப்படுவதைக் கண்ட நான் அது உண்மையில் பேய்தானோ என நடுங்கிவிட்டேன். நீங்கள் இருவரும் ஓடுவதைக் கண்டதும் என்னால் பயமின்றி எபபடி இருக்கமுடியும்? நானும் ஓடி வந்து உங்கள் மீது விழுந்து பிணம்போல் கிடந்தேன்"

மௌல்வி தலை குனிந்தார். கோபாலனும் மற்றவரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.



பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

சமரஸப் பாட்டு

★

(ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்).

“கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்” என்று மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமான ஸ்வாமிகள் ஒரு பாட்டிலே சொல்லுகிறார். அதிகமாகப் படிக்கப் படிக்க மனிதனுக்கு வாதத்திலும் தர்க்கத்திலும் புத்திபோகிறது; தான் மௌனமாக இருப்பதை விட்டு விட்டு, எதிராளியை எப்படியாவது வாயை அடக்கி அவனது மௌனத்தில் தான் சந்தோஷப்பட வேண்டுமென்று முயல்கிறான். பிரதிவாதியைப் பயமுறுத்தி அடக்கி விட்டோமென்பதைக் கௌரவமாக எண்ணித் தருக்குகிறான். கல்வித்துறைகள் எல்லாவற்றிலும் இந்தச்சண்டை இருக்கிறது. ஆனால் இந்த நாட்டில் சாத்திரச் சண்டைக்கு அப்புறந்தான் மற்றச் சண்டைகளெல்லாம்.

பிள்ளையார் பூசை செய்வது முதல் வேதோபநிஷத்தின் உண்மையைத் தெளிவது வரையில் ஆயிரம் சம்பிரதாயங்கள், ஆயிரம் மதங்கள்; பல்லாயிரம் பேதங்கள்! இவற்றையெல்லாம் பார்க்கும்போது நிரீசுவர வாதியாக எந்த மதத்தையும் சாராமல், கண்கண்ட உலகத்தில் நல்லவனென்ற பெயரெடுத்து இறந்துபோவதே போதுமென்ற நினைவு கூடச் சில சமயம் வந்துவிடுகிறது. இவ்வளவு வேற்றுமைகள் எதற்கு?

இந்தச் சிக்கல்களுக்கிடையே நாம் அகப்பட்டுக் கொண்டால் தெய்வ ஒளியை எப்படிக் காணப்போகிறோம்!

இப்படி எண்ணிச் சலிப்படைந்து விட்டால் உய்யும் வழிதான் எது? பாரத சமுதாயத்தின் பழம் பெருமையெல்லாம் பொய்யா? சமயத்தின் பெயரால், வேத வேதாந்தத்தின் பெயரால், நம்முடைய நாட்டில் எல்லோருடைய வாழ்க்கையிலும் பலவகையான சாதனங்கள், தெய்வத்தை அணுக வேண்டுமென்று உண்மையான ஆர்வத்தோடு செய்யும் முயற்சிகள் கலந்திருக்கின்றனவே, அவைகளெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகப் போனவைகளா? கணிக்கமுடியாத பல கோடி நூறாயிரம் வருஷங்களென்று புராணம் சொல்கிறது; அதை நம்பாவிட்டாலும் பல்லாயிரம் வருஷங்களாகப் போற்றி வளர்த்து வந்த தெய்வ நம்பிக்கையின் அஸ்திவாரத்தையே வருங்கால சந்ததியார் தகர்த்து விடத்தான் வேண்டுமா?

ஊஹூம்! தலையைத்தான் வலிக்கிறது. ஒரே குழப்பமாக இருக்கிறது. யோசிக்க யோசிக்க வேற்றுமைகளின் சொரூபமும் எண்ணிக்கையும் பெரியனவா ராக்ஷஸர்கள் மாதிரி முன்னே நின்று பயமுறுத்துகின்றன. கொடிப்பிணக்கு நிறைந்த காட்டுக்குள்ளே புகுந்து வழி காணாமல் புத்தி தத்தளிக்கிறது. ஈசுவரா! இதுதான் இந்து சமுதாயமா? பாரத நாட்டின் மெய்ஞ்ஞானமா!

* * * *

நம்பிக்கையை இழக்க வேண்டாம். அப்படி இழக்க வேண்டிய நிலை இன்னும் வரவில்லை; வரவே வராது. அட பைத்தியக்கார மனமே, எவ்வளவோ காலமாக ஊன்றிப் படர்ந்த பெரிய மரத்தின் சல்லி வேர்களைக் கண்டல்லவா நீ பயந்து போய் விட்டாய்! லக்ஷக்கணக்காக இருக்கும் அந்தச் சல்லி வேர்களினாலா மரம் ஜீவித்திருக்கிறது?

மூடமே! அதோ பார்: ஆணி வேர் இரும்பு மாதிரி பூமி தேவியின் ஹிருதயத்திலே ஆழப் பதிந்து மேலே படர்ந்திருக்கும் மரம் முழுவதற்கும் ஆதாரமாக இருக்கிறதைக் கவனி. நீ ஏன் இந்தச் சல்லி வேரைக் கண்டு பிரமிக்கிறாய்? அவைகளை அசட்டை செய். நேரே போ; ஆணி வேரைப் பார்; இப்போது தெரிகிறதா சூக்ஷ்மம்? வேற்றுமையிலே ஒற்றுமை விளங்குகிறதா? அவ்வளவு சல்லி வேர்களையும் தறித்துவிடலாம்; மரத்திற்குக் கேடு ஒன்றும் வராது. ஆனால் ஆணி வேரைத் தறித்து விட்டு அவ்வளவு சல்லி வேர்களையும் ஜாக்கிரதையாக வைத்துப் பார். மரத்தை அடுப்புக்குப் போட வேண்டியதுதான்.

வேற்றுமைகளைப் பெரிதுபடுத்தாமல் பலவகையான பக்குவிகளுக்கு உண்மை தெரியும் மட்டும் சாதனம் செய்ய அவ்வப்போது இயல்பாக ஏற்படும் முறைகள் அவை என்று உணர்ந்துகொள்; அந்த முறைகளெல்லாம் மூல தத்துவத்தைச் சார்ந்து நிற்கவேண்டும். அந்த மூலத்தை மறந்து வேற்றுமையை மட்டும் பெரிதாக்கிக் கலகம் விளைத்த கறையான்கள் காலத்துக்குக்காலம்தோன்றும் அழியும். ஆனாலும் ஆணிவேர் கம்பீரமாகத்தான் இருக்கிறது.

இந்தச் சமரஸ நோக்கத்தோடு மூர்த்திகளையும் சமயங்களையும் பார்க்கும் சமரஸ ஞானச் செல்வர்கள் எல்லாச் சமயத்திலும் இருக்கிறார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் முதலியவர்கள் அந்த நெறியை உலகுக்குக் காட்டியவர்கள். தமிழ்நாட்டில் தத்துவராயரும் தாயுமானவரும் சமரஸ போதம் செய்தார்கள்; அருட்பிரகாச வள்ளலென்னும் இராமலிங்கசுவாமிகள் சமரஸத்தையே தம் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தார்; சமரஸத்தையே முழக்கினார். இந்தக் காந்தியுகத்தில் சமரஸந்தான் வெல்லும்; உலக ஒற்றுமையை நிறுவும் சக்தி அதற்குத்தான் உண்டு.

மனிதனுக்கு இயல்பாகவே சமரஸ ஞானம் இருக்கிறது. கால தேச வர்த்தமானங்களின் வேகம் அவனைப் பிசாசு போலப் பிடித்துக் கொண்டு ஆடாத ஆட்டமெல்லாம் ஆட்டி வைக்கிறது. பரமார்த்தத்தை உணர்ந்த ஞானியர் சமரஸத்தைப் போதிப்பது பெரிதல்ல. கல்வியில்லாத பாமரர்கள் தங்கள் நித்தியப்படி வாழ்க்கையிலே பேதமில்லாதபடி பல கடவுளரையும் வணங்கி ஆளுக்கு ஒரு கும்பிடு போடும் வழக்கத்தை இன்றும் நம் நாட்டிலே காண்கிறோம். அவர்களுடைய பேச்சிலும், பாட்டிலும், நடத்தையிலும் இந்தச் சமரஸத்தின் வித்து அடங்கியிருக்கிறது.

ஏற்றப் பாட்டைத்தான் சற்றுப் பார். ஏற்றக்காரன், பிள்ளையாரையும் பெருமாளையும் சிவனாரையும் வேண்டிக்கொண்டு இறைக்க ஆரம்பிக்கிறான். சிவனும் பெருமாளும் அவனுக்கு இணைந்த இரட்டைத் தெய்வங்களாகப்படுகிறார்கள். சிவனும் பெருமாளும் சேர்ந்து ரதம் ஏறுகிறார்கள். “அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயிலே மண்ணு” என்ற சமரஸப் பழமொழி அந்த அப்பாவிகளின் இலக்கியத்தில்தான் இருக்கிறது.

ஏற்றக்காரன்கூறும் பிரார்த்தனையைக் காது கொடுத்துக் கேள்:

பிள்ளையாரே வாரீர்!
பெருமாளே வாரீர்!
பெருமாளே வாரீர்!
சிவனாரே வாரீர்!
சிவனும் பெருமாளும்
சேர்ந்து ரதம் ஏற,
குருவும் பெருமாளும்
கூடி ரதம் ஏற
ஹரியும் சிவனும்
பெரிய ரதம் ஏற
நானும் பெருமாளும்
நடுங்கிப் பணி செய்ய

(17-ம் பக்கம்)

குண்டலகேசி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இறேல் அது வாடிவிடும். முகம் குவியும்”

‘அரைக்கணமும் பிரியேன்’

“சயந்தி, நீ அதிகம் படிக்காவிட்டாலும் அறிவு மிகுதியாக உடையவள். உன் உள்ளம் கவிஞரின் உள்ளம் போன்றது. சிறிய வயதில் பேரறிவு படைத்துள்ளாய். உன்னை அரைக்கணமும் பிரிய விரும்பேன்”

“அப்படியானால், நேற்று முழுதும் அடியேனை மறைந்திருந்தது ஏனோ? தாங்கள் இல்லையேல் நானும் இங்கு இல்லாதவள் போலத்தான்; என் உடல் மட்டுமே இங்கு இயங்கும்”

அவள் வார்த்தைகளால் ஸத்துகன் மனம் புழுங்கியது. சயந்தியின் வாடிய வதனத்தையும், அவள் கண்களில் நீரூற்று எழுவதையும், வருத்தத்தை மறைக்க அவள் குறு நகை புரிவதையும் கண்டு அவன் மனம் இளகியது. அவள் உள்ளத்தைப் புண்படுத்தும் வார்த்தைகளை அவளிடம் கூற அவனுக்கு மனமில்லை. ‘உன்னையே நம்பியிருக்கும் எளியபேதை—சயந்தியின் மனம் புண்படும்படி செய்தாயேல், எழுபிறப்பும் அத்தீவினை தொடர்ந்து உன்னை வருத்தும்’ என்று அறிவென்னும் அமைச்சன் அவனுக்குக் கூறினான்.

“சயந்தி, சில நாட்களாக வேலை மிகுதியாக இருக்கிறது. சில முக்கிய காரியங்களில் கவலை கொண்டிருக்கிறேன், அதனால் இரவில் கூட வருவதற்கில்லை...ஆனால், உன்னை மறவேன்”

“என்ன? இன்று இரவும் வேலையா?” என்று அவள் கேட்டுப் பெருமூச்சு விட்டாள். அப்போது அவள் கையிலிருந்த செங்கழுநீர் மலர் கருகிவாடியது. ஸத்துகன் அதைப்பார்த்து வியப்புற்றான். உடனே அதைத் தன் கையில் வாங்கி, “சயந்தி, உன் பெருமூச்சின் வெம்மை தாங்காமல், தளிருடன் கூடிய இச்செங்கழுநீர் மலர் கருகி விட்டதே! ஆ! என்ன வெம்மை உன் மனதில்!”

“அதற்குக் காரணம் யான் அல்லவே! தங்கள் பிரிவின் வெம்மையல்லவா அது!” என்று கூறிக் கண்ணீரை ‘மளமள’ வென்று சொரிந்தாள். அப்போது ஸத்துகன் கண்களில் கூட நீர் துளித்தது.

இன்பக்கனி எங்கே?

“சயந்தி; வருந்தாதே! எவ்வளவு நாழிகை ஆயினும், இரவில் இங்கு வருகிறேன்; உன்னை மறந்திருப்பது என்னை மறந்திருப்பதுபோல் ஆகும்; இதை நீ நம்பவேண்டும்,...நம் இன்பக்கனி எங்கே? உறங்குகிறானா?”

அப்போது துன்பம் மறைந்து இன்பம் நிறைந்தது சயந்தியின் மனத்தில். அவள் வதனமும் மலர்ந்தது. விரைந்து அப்புறம் சென்றாள். மலரணையில் மயங்கி உறங்கிய மைந்தனை எடுத்துக் கொணர்ந்து ஸத்துகன் மடியில் வைத்தாள். மலர் விழி திறந்து குறு நகை புரிந்தான் மகன். அக் குறு நகை, ஸத்துகனின் வஞ்சம் நிறை மனத்தை எள்ளி இகழ்வதுபோன்று தோற்றியது. கைகால்களால் அடித்தும் உதைத்தும் ஆரவாரம் செய்தான் ஸத்துகனை. இன்பக் கனியாம், மைந்தனைக் காணுந் தோறும். அவன் உவகைக் கடலில் மூழ்கி எழுந்தான். அவ்விள மைந்தனின் சிவந்த கன்னங்களை முத்தமிட்டு மேலும் சிவக்கச் செய்தனர் சயந்தியும் ஸத்துகனும். செவ்வாய் திறந்து சிறு சொல்மிழற்றினான் மைந்தன். இளங்குழவியின் மழலை மொழியால் இருவரும் ஒருங்கே மன மகிழ்ந்தனர். ஆ! என்ன இன்பம்! என்ன இன்பம்! ‘மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்; மற்று அவர் தம் சொற் கேட்டல் இன்பம்’ செவிக்கு என்பது பொய்யா மொழியன்றோ?

சயந்தியின் விரதம்

குழந்தையின் விளையாட்டிலே இருவரும் சிறிது நாழிகை மகிழ்ந்திருந்தனர். அவ்வளவில், சூரியனின் வெம்மை குறைந்தது. குளிர்ந்தகாற்று சாளரங்கள் வழியே வீசியது. அப்போது வீதியில் மகளிர் குதூகலத்துடன் கூடிப்பேசிக்கொண்டு செல்லும் ஆரவாரம்கேட்டது. மேல்மாடத்திலிருந்து பார்த்தாள் சயந்தி. இந்திரவிழாவின் கடைசி நாள் என்ற ஞாபகம் அப்போதுதான் வந்தது. ஆனால், ஸத்துகனின் காரியங்களுக்கு இடையூறு செய்ய அவள் விரும்பவில்லை. அவ்வாறு இருந்தும் ஆவல் தணியவில்லை; “இன்று இந்திர விழாவின் கடைசி நாள்; ஆனால் தங்கள் காரியத்திற்கு இடையூறு இல்லாமல் இருந்தால்...” என்று வார்த்தையை இழுத்தாள். அதைக்கேட்டவுடன் ஸத்துகன் தன்னை நொந்து கொண்டான்.

“ஏன், நான் வராவிட்டாலும் நீ போய்ப்பார்த்து வரலாமே! நாகவல்லியையும் உடன் அழைத்துப்போ. வேண்டுமானால் பாலகனை அனுப்புகிறேன்” என்றான். “வேண்டாம்; அப்படி அவசியம் இல்லை. முன்பு பார்த்தவைதாமே அவைகள்! தாங்கள் இல்லாமல் இம்மாளிகையைவிட்டு அகல்வதில்லை என்பது என் விரதம்” என்றாள்.

சயந்தியின் மன இயல்பையும் அன்பையும் அறிந்து ஸத்துகன் மனமிரங்கினான். ‘இவளை நான் வஞ்சிப்பது எவ்வாறு தகும்?’ என்று அவன் மனம் கலங்கியது. சயந்திக்கு மனம் குளிரும்படி வார்த்தைகளைக் கூறினான்.

புத்ததேவர் அருளிய பிடகத்திரயங்களிலிருந்து பல அரிய கருத்துக்களை எடுத்துகூறினான். பரோபகார நிமித்தமாக, புத்ததேவன், தனது உடல் முதலியவற்றைத் தியாகம் செய்த பல வரலாறுகளைக் கூறினான். அவற்றைக்கேட்டுச் சயந்தி மனம் குளிர்ந்திருந்தாள். இவ்வாறு இனிமையாகப் பேசிக்கொண்டே அஸ்தமனம் வரை அங்கு இருந்தான். கதிரவன் மறைந்தவுடன் நிலவு பரவியது. ஆனால் ஸத்துகன் மனத்தே அஞ்ஞான இருள் கவிழ்ந்திருந்தது.

“நான் போய்விட்டு, இரவில் எவ்வளவு நாழிகை சென்றாலும் வந்துவிடுகிறேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். மறுமொழி கூறுவதற்கு அஞ்சினாள் சயந்தி. எனினும் துணிவுடன், “தங்களைக் கண்டபின்பே என் மனம் ஆறுதலுறும்” என்றாள். ஸத்துகன் விரைவாகக் கீழிறங்கி, குதிரைமீது ஏறிக்கொண்டான். ஸத்துகன் சென்றவுடன் கதவைத்தாளிட்டுக் கொண்டாள் நாகவல்லி.

பத்திரையின் ஆனந்தம்

சயந்தியை ஏமாற்றிவிட்டதாக எண்ணி குதூகலத்துடன் சென்றான். நேராகக் காவிரிச்சங்கமத்திற்குக் குதிரையைச் செலுத்தினான். வழியில் விநோதமும் வேடிக்கையும் நிறைந்த பலவகைக் காட்சிகளைக் கண்டான். பத்திரையைக் கண்டு இன்புறலாம் என்று அவன் மனம் குதூகலத்துடன் கொந்தளித்தது. கடலோரமாக நீண்ட நாழிகை குதிரை மீது ஏறிய வண்ணம் உலாவினான். மனத்தில் பத்திரையைப்பற்றிய சிந்தனை அதிகமாயிற்று. வானத்தை நிமிர்ந்து பார்த்தான். அமுத கிரணங்களை அள்ளிப் பொழியும் சந்திரனைக்கண்டான். நாழிகை ஆகி விட்டதை உணர்ந்து, பத்திரையின் மாளிகைக்கு விரைந்து செலுத்தினான் குதிரையை. வணிகர் வீதியில் ஜனக் கூட்டத்தின் ஊடே விரைந்து சென்றான். சில கணத்தில் பத்திரையின் மாளிகையை அடைந்தான். மாளிகையின் ஒரு புறத்தில் குதிரையை நிறுத்தி விட்டு, உள்ளே சென்றான். மிக்க பசியுள்ளவர் உணவைக் கண்டது போல், ஸத்துகனைக் கண்டதும் பத்திரைக்கு ஆனந்தம் பொங்கியது. ஏன்? காதலும் ஒரு வகைப் பசிதானே! அகிற்புகையின் நறுமணம், தீப ஒளி, பூக்களின் அலங்காரம்—இவற்றால் கன்னிமாடம் மங்கிளகரமாகத் தோற்றியது. அழகுக்கு அழகு செய்ததென அலங்கரித்துக் கொண்டிருந்தாள் பத்திரை. ஸத்துகன் அவளுடன் கட்டிலில் அமர்ந்தான். உணவு வகைகளும் பழவகைகளும், மதுபானமும் அவன் முன் கொணர்ந்து வைத்தாள் வசந்தி.

கட்டிலில் உட்கார்ந்த சில கணத்திற்கெல்லாம் அவன் இதயம் ஏதனாலோ துடித்தது. மனத்தில் கலக்கம் மூண்டது. அச்சம் ஒரு புறம் ஆவல் மற்றொரு புறம். அதை அவன் மறைத்துக் கொண்டாலும் அவன் முகத்தில் குதூகலம் குறைந்து விட்டது. தான் ஆலோசித்த விஷயத்தை வெளியிடத் தருணம் இதுதானென்று அவனுக்குத் தோற்றியது.

ஸத்துகன் வெளியிட்ட யோசனை

“பத்திரை, ஒன்று கூறுகிறேன் கேள்; என் ஆதீனத்தில் ‘ஸத்துக மந்திரம்’ என்னும் பௌத்த சங்கம் ஒன்று இந்திர விகாரத்துக்குப் போகும் வழியில் இருக்கிறது. அதில் நாள் தோறும் புத்தமித்திர அடிகள் என்னும் முனிவரால் தருமவுரை நடைபெறும். பிக்ஷுக்கள் பிக்ஷுணிகள் இருக்கிறார்கள். பல ஆடவரும் மகளிரும் அங்கு வந்து தருமவுரை கேட்டுச் செல்வார்கள். ஆதலால், நீ மாலையில் அங்கு வசந்தியுடன் வந்து நாள் தோறும் தருமவுரை கேட்டுச் செல்லலாம். நான் அங்கே இருப்பேன். இதனால் நான் உன் தந்தையுடன் பழகுவதற்கு எளிதாக இருக்கும். இங்கு வந்து போவதற்கும் எனக்கு எளிது” என்றான். பத்திரை அதற்கு உடன்படாமல் என் செய்வது?

ஸத்துகன் விஷயமாக எந்தக் காரியத்தையும் செய்ய ஆயத்தமாயிருந்தாள் பத்திரை. காதலின் புது மலர்ச்சி அவளது அறிவை மழுங்கச் செய்தது. உடனே உவகையுடன் “தாங்கள் சொல்லியபடியே செய்கிறேன். இதனால் எனக்குமிகவும் சந்தோஷமே” என்றாள். ஸத்துக மந்திரத்திற்கு வரும் வழியை வசந்திக்குச் சொன்னான். அதைக் கேட்டவுடன் வசந்தியின் உள்ளம் துணுக்குற்றது. ‘இதென்ன விபரீதம்! இவ்வழி குறி பின்னே நேரப்போகும் பெரும் துன்பத்திற்குத் தானே!’ என்று கலங்கினாள்.

சூரியன்போல் ஒளியைத் தந்தாலும் வெம்மையளிக்காமல் குளிர்ச்சியையே அளித்தான் சந்திரன். ஆனால் துணை பிரிந்த காதலருக்கு வெம்மையை தந்தது அந்நிலா. இரவின் பிற்பகுதி. ஸத்துகன் பத்திரையிடம் விடை பெற்றுப் புறப்பட்டான். முன்பு உறக்கத்திலிருந்து பத்திரை விழித்துக்கொண்டாள். சயந்தியிடம் ஸத்துகன் போகிறான் என்பதை அவள் அறியவில்லை. பூனை போல் பதுங்கியிருந்து புலிபோல் விரைவில் வெளியேறினான். வசந்திக்கு மட்டிலும் ஸத்துகன், அவன் மாளிகைக்குச் செல்லவில்லை என்பது தெரியும்.

அடுத்த வாரம்:—
‘சர்வம் நாசம்’

ஷாப்புகளில் கிடைக்கும்.

என்னுடைய யுக்தி

சிறு கதை

★

கிச்சு

ஒரு நாள் ராத்திரி நான் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது ராஜம் "உங்களுக்கு அடுத்தாத்திலே இருக்கிருரே, அவரைத்தெரியுமோல்லியோ?" என்று கேட்டாள். சகஸ்ரநாமய்யரையா எனக்குத் தெரியாது? எத்தனை தடவை என்னிடம் இரவலாக மூக்குபொடி வாங்கிப்போட்டுக்கொண்டிருக்கிருர்? ஹோட்டலில் சில சமயங்களில் சந்திக்கும் பொழுது இரண்டு அரைகப் காப்பி கொண்டுவரச் சொல்லுவதற்குப் பதிலாக மொத்தமாக ஒரு கப் காப்பி கொண்டுவரச் சொல்லி நமக்குள் 'அட்ஜஸ்ட்' பண்ணிப்போம் என்று இரண்டு பங்காக பிரிக்கச் சொல்வார். நாங்கள் சாப்பிட்டு விட்டு நான் ஓட்டல்காரருக்கு துட்டுக் கொடுப்பேன். சகஸ்ரநாமய்யர் அரைகப் காப்பிக்கு முக்காலணு கொடுப்பார் என்று எதிர் பார்த்ததற்குப் பதிலாக அவர் என்னிடம் அரையணு கொடுத்து எவ்வளவு தடவை ஏமாற்றியிருக்கிருர்?

"தெரியும் என்ன விசேஷம்?" என்று கேட்டேன்.

"அவருக்கு சீட்டாட்டம் என்ருல் தலை கால் தெரியாது போலிருக்கிறது. அவர் ஆம்படையாள் சின்னஞ்சிறுசு. அவளை வீட்டில் தனியாக விட்டுவிட்டு ஒருநாள் போல் ராத்திரி ஏழு மணிக்கு சீட்டாடப் போகிறவர் லோந்துகாரன் மாதிரி ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு வருகிருராம்" என்ருள்.

"நிஜமாகவா?" என்றேன்.

"ஆமாம்! அந்தப் பெண்ணே என்னிடம் வந்து அழுதது. என்ன சொன்னலும் கேட்கமாட்டேன் என்கிருராம். உங்களுக்குத்தான் அவரை தெரியுமென்கிறீர்களே! அவரிடம் ஒரு வார்த்தை சொல்லுங்களேன்" என்ருள்.

"அதற்கென்ன ஆகட்டும்" என்றேன்.

* * * *

அடுத்த நாள் மத்தியானம் ஊரிலேயிருந்து ராஜத்தின் தகப்பனுருக்கு உடம்பு சரிப்படவில்லை என்றும் நாங்கள் இரண்டுபேரும் உடனே கிளம்பி வரவேண்டும் என்றும் தந்தி வந்தது. எனக்கு ஆபீஸில் லீவு கிடைக்காததால் அவளை ராத்திரி போட் மெயிலில் ஏற்றவிடப் போயிருந்தேன். ரயில் கிளம்ப ஐந்து நிமிஷமிருக்கும். நான் ரயிலை விட்டு கீழே இறங்கினேன்!

"அடாடா! உங்களிடம் சொல்ல வேண்டுமென்று இருந்தேன். மறந்து போய் விட்டேனே! நல்ல வேளையாக ஞாபகம் வந்தது. நேற்று அடுத்தாத்துப் பெண்ணைப்பற்றிச் சொன்னேனே அந்த விஷயத்தில் நீங்கள் தலையிட வேண்டாம். அவா ஆம்படையான் பெண்டாட்டி சமாசாரம் ஆயிரமிருக்கும். நீங்கள் ஏதாவது இதில் அகப்பட்டுக்கொண்டு முழிக்காதேயுங்கோ" என்ருள்.

"சரி, ஆகட்டும்" என்றேன். ரயிலும் கிளம்ப விசில் கொடுத்தாய் விட்டது. "நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்" என்ருள் ராஜம். எது என்ருல் நான் அடுத்தாத்து பெண்மணி விஷயத்தில் தலையிடவேண்டாம் என்கிற விஷயத்தை நான் மறந்துவிடக்கூடாது. அவ்வளவுதான். வீணுக்கதையை வளர்த்துவானேன்! ராஜத்திற்கு என் பேரில் நம்பிக்கை கிடையாது. எனக்கு எத்தனை மணிக்கு ஆபீஸ் ஆரம்பம் எத்தனை மணிக்கு முடிகிறது, காலை வேளையில் டிராம் வேகமாகப் போகுமா? அல்லது மெதுவாகப் போகுமா? அப்படி மெதுவாகப் போகுமென்ருல் ஆபீஸிற்குப் போக எத்தனை நிமிஷம் செல்லும், அப்படியே திரும்பி வர எத்தனை நிமிஷம் செல்லும் என்றெல்லாம் விசாரித்து வைத்துக்கொண்டிருக்கிருள். மேலும் நான் எங்கேயாவது நான் உறவினரின் வீட்டிற்குப் போய்விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் ஆபீஸிற்குப் போனவுடன் அந்த உறவினர் வீட்டிற்கு வந்தேனு இல்லையா என்று விசாரித்து விடுவாள்.

கல்யாணமான தினத்திலே இருந்து ஒரு நாள் கூட அவள் தகப்பனுர் எவ்வளவோ தடவை வரும்படி எழுதியும் போகவில்லை. இப்பொழுது அவருக்கு உடம்பு சரியாயில்லை என்று தெரிந்த பிறகு வேறு வழியில்லையே என்று ஊருக்குப் போகச்சம்மதித்தாள்.

எனக்குக் கோபம் வந்துவிட்டது. இவள் சொல்லவாவது, அது மாதிரி நடக்கவாவது என்று. மேலும் ஏக்கச்சக்கமாக அகப்பட்டுக்கொள்ளாமல் என்னல் ஒரு காரியமும் செய்ய முடியாதா என்ன? அந்தக் காரியத்தை சாதித்து விட்டு, தான் சொன்னது தப்பு, தப்பு என்று அவள் கன்னத்தில் போட்டுக் கொள்ளும்படி செய்து விடவேண்டும் என்ற உறுதி எனக்கு உண்டாயிற்று. அடுத்த நாள் சாயங்காலம் அகஸ்மாத்தாக சகஸ்ரநாமய்யரை பீச்சில் கண்டேன்.

"அதென்ன ராத்திரி அத்தனை தடவை உங்கள் வீட்டுக் கதவை யார் தட்டினுர்கள்? நீங்கள் வீட்டிலில்லையோ?" என்று கேட்டேன்.

"என்ன? கதவைத் தட்டினுர்களா?" என்று கேட்டார் அவர் திடுக்கிட்டு.

"ஆமாம்! ராத்திரி எட்டரை மணிக்கு தூக்கம் கண்ணைச் சுற்றி வருகிறதே என்று படுத்துக்கொண்டேன். படுத்து கால் மணிகூட இருக்காது. யாரோ 'அம்மா! சாமி இருக்கிருரா!" என்று கதவைத் தட்டினுர்கள். 'இல்லை' என்ற பதில் உள்ளேயிருந்து வந்தது. அப்புறம் அரைமணி கழித்து யாரோ கதவை "சார் இருக்கிருரா?" என்று கதவை தட்டினுர்கள்." இல்லை என்ற பதில் தான் உள்ளேயிருந்து வந்தது. இதுமாதிரி நேற்று ராத்திரி ஏழெட்டு தட்வை யார் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. வந்த தூக்கமும் ஓடிப்போய்விட்டது. கொட்டுடாருடையடா என்று தூக்கமில்லாமல் இரவைக் கழித்தேன். யாரோகூட ஓட்டுமேலே நடக்கும் சப்தமும் கேட்டது." என்று ஒரு பெரிய சரடுவிட்டேன்.

"என்ன நிஜமாகவா? நான் சீட்டாடப் போயிருந்தேன். ராத்திரி வரும்பொழுது பன்னிரெண்டு மணியிருக்கும்" என்ருர்.

"ஓகோ அது தான் சமாசாரம். நீங்கள் ராத்திரி பன்னிரெண்டு மணிக்குத்தான் வருவேன் என்று யாருக்கோ தெரிந்திருக்கிறது. இது காலாடிப் பயல்ஊரோன்னே, அது தான்" என்றேன். அவர் என்னை மேலும் பேசவிடவில்லை.

"நிறுத்தும்! நீர் யாரோ கதவை தட்டினுர்கள், என்று சொல்லுவதெல்லாம் சொப்பனம். எந்தப்பயல் நான் இல்லாத பொழுது என் வீட்டுக் கதவை வந்து தட்டுவான்? அப்படி எவனுவது செய்தால் அவன் முதுகுத்தோலை உறித்து விடமாட்டேனு?" என்ருர்.

எனக்குக்கோபம் வந்துவிட்டது. நான் சொல்லுகிறது எல்லாம் முழுப்பொய், சொப்பனம் என்ருல் அதைவிட மானக்கேடு என்ன வேண்டும்? போனது போகட்டும். நான் சொல்வது நிஜமாயிருக்கட்டும், பொய்யாயிருக்கட்டும்; ராத்திரி அவர் சீட்டாடப்போகாமலிருக்கிருரோ என்று பார்த்தேன். அதுதான் இல்லை. ராத்திரி ஏழு மணிக்கு "அடியே! கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கோ" என்று சொல்லிவிட்டு போய்விட்டார். ராத்திரி பன்னிரெண்டு மணிவரையில் அவர் திரும்பிவரவில்லை.

என்ன செய்வது, எப்படி அவரை சீர்திருத்துவது என்று எனக்குப்புரியவில்லை. அடுத்த நாள் இரவு ஏழு மணிக்கு சீட்டாடப்போனவர் திரும்பி எட்டு மணிக்கெல்லாம் வந்து விட்டார். அவரும் அவருடைய மனைவியும் பேசிக்கொண்டது கணீர் கணீரென்று என் காதில் விழுந்தது.

"ஏது இன்றைக்கு, சுருக்க வந்து விட்டாப் போலேயிருக்கே" என்ருள். மனைவி "தலையைப்போட்டு உடைக்கிறது, உட்கார் முடியவில்லை. அனுதல் தான் எழுந்து வந்து விட்டேன்" என்ருர்.

என் மூளை விர்ரென்று வேலை செய்ய ஆரம்பித்தது. நான் பத்து நாளைக்கு முந்தி ஆபீஸில் டிராமா ஆடியதில் நான் செட்டியார் வேஷம் போட்டுக் கொண்டிருந்தேன். நான் தான் டிராமா கண்டக்டர் ஆனபடியால் அந்த டிரஸ், மீசையெல்லாம் என்னிடமிருந்தது. சரேலென்று மீசையை ஒட்ட வைத்துக்கொண்டேன். நாமம் போட்டுக்கொண்டேன். செட்டியார் மாதிரி முண்டாசு கட்டிக்கொண்டேன். என்னைப் பார்த்தால் யாரும் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. திடீரென்று போய் "சாமி! சாமி" என்று அடுத்த வீட்டுக் கதவைத் தட்டினேன். நான் இது மாதிரி செய்யாவிட்டால் உள்ளே யிருக்கும் சகஸ்ரநாமய்யருக்கு இப்படித் தான் நான் சொன்னபடி தினம் ராத்திரி யாராவது வந்து அடிக்கடி கதவைத்தட்டுகிருர்கள் என்று எப்படித் தெரியும்! நான் அகப்பட்டுக்கொண்டு விட்டால் என்ன பண்ணுகிறது என்ற கேள்வி என் மனதில் முதலிலேயே உண்டாயிற்று. நானுவது அகப்பட்டுக்கொள்ளவாவது? உள்ளே காலடி சப்தம் கேட்டவுடன் விர்ரென்று என் வீட்டிற்குள் வந்து புகுந்து கொண்டு விடமாட்டேனு? அதற்காகத்தானே என் வீட்டு வாசல் கதவை திறந்து வைத்துவிட்டுப் போனேன்! தெருவில் போகிறவர்கள் யாரடாது கதவை இடிக்கிறது. என்று கவனித்தால் யாரோ செட்டி கதவை இடிக்கிருன். என்று நினைத்துக்கொள்ளட்டும் என்று தானே செட்டி வேஷம் போட்டுக்கொண்டேன்.

"ஐயர் இல்லை" என்று பதில் உள்ளே இருந்து வந்தது. என்ன கேவலமான மனுஷன்! உள்ளே யிருந்துகொண்டே இல்லை என்கிருனே? யாருக்காவது பணம் கொடுக்கவேண்டியிருக்குமோ" என்ற சந்தேகம் உண்டாயிற்று.

வீட்டிற்குப்போய் வீட்டு வந்து பத்து நிமிஷம் கழித்து வந்து கதவை இடித்தேன். நல்ல வேளையாக எங்கள் வீட்டிற்கு எதிர்த்தாப்போல் ஒரு பெரிய தோட்டமிருந்தது, ஆகையால் நான் இப்படி என் வீட்டிற்கு அடிக்கடி போய் விட்டு வருவதைக் கவனிக்க ஒருவருமில்லை, மறுபடியும் 'ஐயர் இல்லை' என்ற பதில் வந்தது. திரும்பவும் பத்து நிமிஷம் கழித்து வீட்டிற்குப்போய் விட்டு வந்து கதவை இடித்தேன். 'ஐயர் இல்லை' என்ற பதிலே திரும்பி வந்தது, "நல்ல ஆசாமி இவர்! நான் சொன்னதையெல்லாம் மறந்து விட்டார். ஒரு மனுஷன், கதவை யாராவது இடித்தால் யார் இடிக்கிருர்கள் என்று கூடக் கதவை திறந்து பார்க்கமாட்டானு?" என்று வீட்டிற்குத் திரும்பும்சமயம் "பளார் பளா" ரென்று. என் கன்னத்தில் இரண்டு அறை விழுந்தது.

"நானும், அப்பத்தொட்டு எதிர்த்த தோட்டத்திலேயிருந்து கவனித்துக் கொண்டு வரு

(அடுத்த பக்கம்)

உண்மைச் சம்பவம்

தெய்வ பக்தி

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

சற்றேறக்குறைய 30 வருஷங்களுக்குமுன் நடந்த செய்தி: தெய்வ பக்தி மிகுந்த காலம். நாஸ்திக வாதம் குறைவு. கடவுளை விடாமல் துதித்தால் எப்படியும் இரங்கி அருள் புரிவார் என்று நம்பும் காலம். மழையே கிடையாது. ஐப்பசி மாதத்தில் வெயில் கொளுத்துகிறது. ஓரிடத்திலும் தண்ணீரே கிடையாது. கிராமங்களில் வருண ஜபம் ஜபித்தால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை அதிகம். அதற்கு சாஸ்தா (ஹரிஹர புத்ரர்) கோவிலில் போய்த்தான் சாஸ்தா பிரீதி பண்ணி வருண ஜபம் செய்வது வழக்கம். முருகக் கடவுளுக்கு மலைமேல் வசிப்பது பிரியம். அதே போல சாஸ்தாவுக்கும் யாருமில்லாத அடர்ந்த கானகத்தில், வனுந்தரத்தில் வசிப்பதுதான் பிரியமாம். அதனுல் தான் ஐயனர் கோவில்கள் எல்லாம் அநேகமாய் காடுகளிலேயே அமைந்திருக்கின்றன. எங்கள் ஊர் திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கிராமம். ஊரையடுத்த ஐந்தாவது மைலில் சாஸ்தா கோவில். போகும் வழியில் இரண்டு மூன்று கோவில்களிலிருக்கின்றன. ஊர் மிகச் செழுமை வாய்ந்தது. வயல்கள் சூழ்ந்தது. அந்த வருஷம் ஆதித்தன் அதிகமாய்க் காய்ந்ததனுல் மரம், செடிகள் யாவும் உலர்ந்து, பட்டு லக்ஷ்மீகரமாகத் தோற்றமளிக்கும் ஊரானது பாழடைந்து விளங்கிற்று. இந்தக் கொடுமையைப் பொறுக்காத விவசாயிகள் அந்தணரிடம் முறையிட்டனர். அக்காலத்தில் இப்போது மாதிரி பிராமணர் அல்லாதார் என்ற வித்யாசமும், அதனுல் சச்சரவும் கிடையாது. எங்கள் கிராமத்தில் ஒற்றுமை அதிகம். தங்கள் பண்ணையாட்களின் துயரத்தை ஸகிக்காத அந்தணர் உடனே மழை பெய்ய ஏற்பாடுகள் செய்யலாயினர்.

பிராமணர்களிடம் இந்தக் காலத்தில் ஹரிஜனமென்று பெயர் பெற்ற பள்ளர், பறையர்கள் தேவதா விசுவாஸம் கொண்டிருந்தனர். ஒவ்வொரு வகுப்பினரும் அவரவராலான உதவியைச் செய்தனர். வருண ஜபம் நடத்தினர்.

எல்லோரும் மத்யானம் பூஜை முடிந்ததும் ஊருக்குத் திரும்பி விடுவார்கள். இரண்டு வேதியர் மட்டும் அங்கேயேயிருந்து கடவுள் தொண்டு செய்து வந்தார்கள். ஜபமும் முடியும் நாள் வரலாயிற்று. நாற்பத்தோரு நாள். ஒரு மண்டலம். இன்னும் நாலைந்து நாள்தானிருக்கிறது. சிவபெருமானுக்குத் தாராபிஷேகப் பிரியம் அதிகம். அதேபோல் தான் சாஸ்தாவும் அபிஷேகப் பிரியர். லிங்கத்திற்கு ஆகாசமே மேல் விதானம். தரையே ஆசனம். அவருக்கு வாகனம் யானை. காவலுக்கு ஒரு கடுவாய். அதாவது புலி ரகத்தைச் சேர்ந்தது. அவ்வளவுதான். கோவில், கட்டிடம் ஒன்றும் கிடையாது. முன்னல் ஒரு சிறு மண்டபம். இரண்டே பேர்தான் இருக்க முடியும். அதாவது உட்கார்ந்திருக்க முடியும். நின்ருல் தலையிலிடிக்கும். மாலை மணி 7. வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. ஆந்தைகள் கண் விழித்து பறக்கின்றன. மனித சஞ்சாரமே கிடையாது. ஸாயங்காலம் 5 மணிக்கே பயங்கரமான தனிமை குடிகொள்ளும். மேலே கூறிய இரண்டு பிராமணர்களும் இரவு தங்குவதற்கென்று கோவிலிலிருந்து சிறிது தூரத்தில் புல் வேய்ந்திருந்த குடிசை தயாரித்திருந்தார்கள். ஸாயங்காலம் ஸந்தியாவந்தனம் செய்துவிட்டு ஸ்வாமி முன்னலை உட்கார்ந்து ஜபம் செய்துகொண்டிருந்தார்கள். ஓர் உறுமல் சத்தம் தூரத்தில் கேட்டது. அதைக் கேட்டு காடு பூராவும் 'கிடு கிடு' என்று நடுங்கிற்று. பிராமணர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அதில் சந்தேஹமும், பயமும், ஏக்கமும் நிறைந்திருந்தன. வர வர உறுமல் சமீபத்தில் கேட்க ஆரம்பித்தது. பிராமணர்களின் மனம் சொல்லொணு வேதனையடைந்தது. பொழுது விடிந்து மனைவி மக்கள் முகத்தில் விழிப்போம் என்ற நம்பிக்கை போய்விட்டது. இருந்தாலும் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்னும் உறுதி மட்டும் மனதில் நின்றது. இரண்டு பேரும் தன்னை மறந்து கடவுளைத் துதித்தனர். நன்ருக அத்யயனம் செய்து வேதங்களைக் கற்றவர்கள் ஆதலால் சுருதி வாக்யங்களைச் சொன்னதும் பயம் சிறிது மட்டும் பட்டது. உறுமல் சப்தமும் உக்ரமாகக் கேட்டுக் கடைசியில் இவர்கள் முன்னலேயே அந்த பிராணி வந்துவிட்டது. 'கடுவாய்' வெகு கோபத்தோடு வந்து நின்றதும் அதன் அகன்ற வாயையும், கோரப் பற்களையும், இருட்டில் நெருப்புப்போல் ஜொலிக்கும் அதன் கண்களையும், கத்திகள் போன்ற நகங்களையும் கண்ட பிராமணர்கள் விரைத்துப் போய், எம்பெருமான் திருவடியில் முடிவைத்துப் பணிந்தனர். மந்திரம் கூறி ஜபித்தலை மட்டும் விடவில்லை கடுவாய் பிராமணர்களை நோக்கி விரைந்தது. சாஸ்தர் லிங்கத்திலிருந்து ஒரு ஹீங்காரம் உண்டாயிற்று. கடுவாய் முன் வைத்த காலைப் பின்னுக்கிழுத்தது, கோவிலை ஒரு பிரதக்ஷிணம் செய்து எங்கோ ஓடிவிட்டது. பிராமணரின் மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா? பொழுது விடிந்தமும் இந்த சங்கதி ஊர் பூராவும் பரவிறறு. சாஸ்தாவிற்கு அபிஷேகமும், ஆராதனையும் நடந்தது. மழையும் பெய்து ஊரைச் செழிப்பாக்கிற்று.

மதராஸ் டி. சி. என். கோல்டன் மெட்டல் ஜ்வல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2-வருஷம் உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

பெரிய சைஸ் 2'' அகலமும்,

அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ. 3 12 0

மத்திய சைஸ் 1¾'' முதல் 2''க்குள் ஜதை ரூ. 3 2 0

குழந்தை சைஸ் 1¾க்கு உட்பட்டது ஜதை ரூ. 2 8 0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதைவரை அணு 8.

எமது கேட்லாக் இனும்.

டி. சி. நாகலிங்கப்பா & கோ.,

280, வால்டாக்ஸ் ரோடு :: பார்க் டவுன் :: மதராஸ்.

என்னுடைய யுக்தி

(முன் பக்க தொடர்ச்சி)

கிறேன். ஏன் சும்மா சும்மா வந்து. கதவை இடிக்கிறீர்? என்ன விசேஷம்" என்ற வார்த்தைகள் இருட்டிலிருந்து கிளம்பின. குரல் சகஸ்ரநாமய்யருடையதுதான். அதில் சந்தேகமேயில்லை. அவர் பேச்சுசப்தம் கேட்டதும் வாசல் கதவைத் திறந்துகொண்டு கையில் ஹரிகேன் லைட்டுடன் பிரசன்னமானுள் அவர் மனைவி சுந்தரி. விஷயம் எனக்குப் புரிந்துவிட்டது. நான் முதல் தடவை கதவை இடித்துவிட்டுவீட்டிற்குப் போனஉடன் மெதுவாக சப்தம் செய்யாமல் கதவைத்திறந்துகொண்டு எதிர் தோட்டத்தில், போய் ஒளிந்து கொண்டு எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் என்று அறிந்தவுடன் திடுக்கிட்டேன். அவர் திரும்பி ஒரு அறை கன்னத்தில் விட்டார். அந்த அறையில் அதிர்ச்சியில் என் மீசை கீழே விழுந்துவிட்டது.

"அடாடா! ருத்ராக்ஷமய்யரா பெரியவாள் எழுந்தருளணும்! பெரியவாள் எழுந்தருளணம்" என்று இன்னும் இரண்டு அறை விட்டார்.

"அடாடா! நான் உங்களுக்கு நல்லது செய்யலாம் என்று நினைத்துக் கொண்டு வந்தால்"

"நல்லதா? நீர் நல்லது தான் செய்ய வந்தீர் என்று இந்த செட்டியார் வேஷம் சொல்லுகிறதே! நான் உம்மைப்பற்றி ஏதாவது சந்தேகப்படப் போகிறேனே என்று கதை அளந்தீர் போலும். நான் உம்மைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். வீட்டில் மனைவியில்லையென்று இப்படி ஊர் சுற்றுகிறீர். என்னிடமே உம் வேலையைக் காட்டிவிட்டீர். இடம் பார்த்து கன்னம் வையும். நீர் சினிமாவிற்குப் போனுல் படத்தைப் பார்ப்பதில்லை அங்கே வந்திருக்கும் பெண்மணிகளையே பார்த்துக் கொண்டு இளித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர் என்று உங்கள் சம்சாரம் சொன்னதாக என்மனைவியிடம் கேள்விப்பட்டிருக்கிறேனே! ஜாக்கிரதை! இனி மேல் இந்த வீட்டுப்படியில் காலை வைத்தால் காலை முறித்து விடுவேன்" என்ருர்.

போதும் போதும்! ஏழேழு ஜென்மத்திற்கு எனக்கு புத்தி வந்து விட்டது! இனிமேல் 'அடி வாங்காமல் இருந்தால் போதும்' என்று வீட்டிற்கு ஓடி வந்து விட்டேன். பல தடவை காப்பி சாப்பிட்டதற்காக எவ்வளவோ ஒன்றரை தம்படிகள் அவர் எனக்கு கடன்பட்டிருக்கிருர்! இதுதான் அவர் எனக்கு அளிக்கும் பதில் மரியாதையா?

அடுத்த நாள் சாயங்காலம் ஆபீஸிலிருந்து வரும்பொழுது சகஸ்ரநாமய்யர் வேறிடத்துக்குக் குடியேற சாமான்களை வண்டியில் ஏற்றுவதைக் கவனித்தேன். ராஜத்தின் வார்த்தையைக் கேட்காதது தப்பு என்று என்பதில் சந்தேகமில்லை நான் நல்லது செய்யப் போக அதுவே எனக்கு வினையாக முடிந்தது.

இப்படியும் செய்வாளா?

★ "ரேவதி" எழுதியது

கமலா ஸோபாவில் சாய்ந்து கொண்டிருந்தாள். அவள் அழகிய முகம் வெளுத்திருந்தது. நெற்றியின் மேல் படிந்திருந்த வியர்வைத் துளிகளை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். அவளது கைகள் நடுங்கின. நகத்தின் நுனிகள் நீலம் பூத்திருந்தன.

'டிங், டிங்,' என்று மணி நாலடித்தது. கமலா, மேலும் கீழும் உற்றுப்பார்த்தாள். ஏதோ பேச வாயெடுத்தவள், கையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

கமலாவுக்கும், ரகுநாதனுக்கும் கலியாணமாகி இரண்டு வருஷங்கள் ஆய்விட்டன. ரகுநாதனுக்குத் தன் மனக்கோட்டைகளைப் பூர்த்தி செய்தது போல்; ஓர் அழகிய, படித்த மனைவி கிடைத்ததும், தலைகால் தெரியவில்லை.

கலியாணம் முடிந்து கமலா புக்ககம் வந்ததும், அவளைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடினான். யாருக்கும் கிட்டாத, ஒரு அரிய பொக்கிஷம் தனக்குக் கிடைத்தது என்று இறுமாப்புக்கொண்டான். தன் சிநேகிதர்களுக்கெல்லாம், அவளை அறிமுகப்படுத்தி, பெருமை அடித்துக் கொண்டான். கலியாணம் ஆனவுடன் மற்ற விஷயங்கள் எல்லாம் அவனுக்கு அற்பமாகத் தோன்றின.

அவன் நினைவெல்லாம் கமலாவைப் பற்றித்தான். அவன் செய்யும் காரியங்கள் எல்லாம் அவளுக்காகத் தான். அவள் மேல் அவன் வைத்திருந்த அன்புக்கு ஒரு அளவே இல்லை.

கமலாவோ, தான் பூலோகத்தில் இருக்கிறோமா, சுவர்க்க லோகத்தில் இருக்கிறோமா என்று சந்தேகப்பட்டாள். பெண் குலத்திலேயே தான் தான் பாக்கியசாலி என்று எண்ணிப் பூரித்தாள். வேறு எந்தப் பெண் தன் கணவனை இப்படி வசீகரப் படுத்தி, ஆட்டி வைக்க முடியும்?

நாட்கள் பல சென்றன. அவர்களுக்குக் கலியாணமாகி ஒரு வருஷத்திற்கு மேலாகிவிட்டது. கொஞ்ச நாளாகவே, கமலாவிற்கு மனது சரியாக இல்லை. காரணமின்றிச் சஞ்சலப்பட்டாள். "முன்பெல்லாம், ஆபீசுக்கு நாழிகை ஆனால் கூட என்னோடு சற்று நேரமாவது பேசாமல் போகமாட்டாரே? இப்பொழுது மணி ஒன்பது அடிப்பதற்குள், ஆபீசுக்கு நாழிகை ஆகிவிட்டது என்று இப்படிப் பறக்கிறாரே? என்னைவிட ஆபீஸ் என்ன முக்கியம்?" என்று எண்ணி ஏங்குவாள்.

"சாயந்திரம் வந்தால், நான் செய்துகொண்டிருக்கும் அலங்காரத்தைப் பார்த்து, மகிழ்ந்து பேசுவார்; இப்போ நான் என்ன அழகு செய்துகொண்டாலும், அவர் சாதாரணமாக நடந்து கொள்ளுவானேன்?" என்று சிந்தனையில் ஆழ்வாள்.

"என்னை விட்டு, ஒரு கணமும் பிரியாமல், நான் கிளப்புக்குக் கூட போக சம்மதியாதவர். இப்போ நான் எங்கு சென்றாலும், ஒன்றும் சொல்லுவதில்லையே? இதற்கெல்லாம் என்ன காரணம்? முன்னைவிட இப்பொழுது நான் என்ன குறைந்து போய் விட்டேன்? இவ்வளவு சீக்கிரமாகவா என் வசீகர சக்தி குன்றி விட்டது? கணவனின் அன்பில்லாத ஒரு ஸ்திரீயாகவா நான் இனி வாழ்நாளைக் கடத்துவது? எனக்கா இந்த கதி? இதற்கு நான் ஒரு நாளும் சம்மதிக்கவே மாட்டேன்! இதற்கு ஏதாவது ஒரு வழி தேடித்தான் ஆக வேண்டும்!" என்ற முடிவுக்கு வந்தாள்.

அவள் பேதை மனதுக்கு ரகுநாதன் தன் மேல் வைத்திருந்த மெய்க் காதலுக்கு ஒரு குறைவும் ஏற்படவில்லை என்பது புலப்படவில்லை. அவன் வெளிப்படையாய்த் தன் அன்பை எடுத்துக் காட்டிய செய்கைகள், தினசரி வாழ்க்கையில் இயற்கையாகவே குறைந்து விட்டதே தவிர, அவன் அவள் மேல் கொண்டிருந்த ஆழ்ந்த காதல் சிறிதளவும் பாதிக்கப்படவில்லை என்பது அவளுக்குப் புரியாத மர்மமாகவே இருந்து விட்டது!

இம்மாதிரி, அசட்டு எண்ணங்களினாலேயே மனமுருகி, ஒரு வழியும் புலப்படாமல், இன்ன செய்வதென்பதே தெரியாமல், கடைசியில் துணிச்சலாக, விஷத்தைக் குடித்து விட்டாள்!

"கமலா, கமலா! ஒரு சந்தோஷ சமாசாரம்!" என்று அன்புடன் அழைத்துக் கொண்டே, ரகுநாதன் உள்ளே வந்தான்.

ஸோபாவின் மேல், கமலா சவமாய், வெளுத்து, உயிரற்றுக் கிடந்தாள்!

சென்றவார நிகழ்ச்சிகள்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னேற முயன்று வருவதாகத் தெரிகிறது.

சில தினங்களுக்கு முன்பே வால்காவிலிருந்து 180 மைல் தூரத்திலுள்ள ஒரு ஸ்தலத்தைத் தாங்கள் அடைந்துவிட்டதாக ஜெர்மனியர் தெரிவித்தனர். ஆனால் ரஷ்ய அதிகாரிகள் தங்கள் அறிக்கையில் அதைப் பற்றிக் குறுப்பிடவில்லை, இப்பகுதியில் ரஷ்யரது நிலைமை கேவலமாகியிருக்கிறது. அதிக பலம் கொண்ட எதிரிகளின் நிர்ப்பந்தம் காரணமாக ரஷ்யர் பின் வாங்கி, புதிய இன்னும் வசதிகரமான நிலையங்களில் அணிவகுத்து நிற்கின்றனர்.

கோடல்னிகோவோவுக்கும் வால்காவுக்கும் நடுவிலுள்ள பிரதேசம் முக்கியமாக ஆஸ்டிராகான் திக்கில் சதுப்பு நிலமும். புதை மணலும் மிகுந்ததாகும். அப்பிரதேசத்தில் பெரும்பாகம் கடல் மட்டத்திற்குத் தாழ்வாக இருக்கிறது. அங்கு டாங்கிகள் போன்ற வாகனங்கள் செல்வது கஷ்டம்.

மினரால்னிவோடி பகுதியில் ஜெர்மன் தாக்குதலின் வேகம் தணிந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

வடக்கிலிருந்து ஸ்டாலின் கிராடை நோக்கிவரும் ஜெர்மன் படைகள் சிறிதளவு முன்னேறி இப்போது அங்கரை நெருங்கி விட்டன. டான் வளைவில் சோவியத் படைகள் இன்னும் தீவிரமாகத் தாக்கி வருகின்றன. எதிரிகள் இரண்டொரு இடங்களில் சிறிதளவு முன்னேறியிருக்கின்றனராயினும் அவர்களுக்கு உருவான வெற்றியெதுவும் ஏற்படவில்லை.

காகஸஸில் கிராஸ்னடார் ஜில்லாவிலுள்ள கியுபன் நதிப் பகுதியில் ஜெர்மனியர் இன்னும் தேக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர். அந்நதியைக் கடக்க முயன்றதில் எதிரிகளுக்குச் சேதம் அதிகம். சில, சிறு ஜெர்மன் பீரங்கிப் படைகள் அந்நதியை படகுகள் மூலம் கடந்திருப்பதாகத் தெரிகிறது.

* * * *

மாஸ்கோவில் சர்ச்சில்

மாஸ்கோவில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை சர்ச்சில்—ஸ்டாலின் சம்பாஷணை நடைபெற்றது. அதில் பிரிட்டிஷாரின் சார்பாக மிஸ்டர் ஹாரிமானும் ஸர் ஆலன் புரூக்கும் ஸர் ஆர்ச்சிபால்டு வேவலும் (இந்திய சேனாதிபதி) ஸர் அலெக்ஸாண்டர் கடோகனும் பிரசன்னமாக இருந்தனர். சோவியத்தின் சார்பாக மொலடவும் மார்ஷல் வொர்ஷிலாவும் பிரசன்னமாக இருந்தனர்.

லண்டனிலும் மாஸ்கோவிலும் பின்கண்ட அறிக்கை ஏக காலத்தில் வெளியிடப்பட்டது:- விடுதலைக்கான இந்த நியாயமான போரில் ஹிட்லரீயமும் அது போன்ற இதர கொடுங்கோன்மை முறைகளும் அடியோடு அழிக்கப்படும்வரை இரு கவர்ன்மெண்டாரும் தமது சக்தியனைத்தையும் கொண்டு போராடுவதாக உறுதிகொண்டிருக்கின்றன.

மிகக் கொழுப்பற்றது

501 ஸ்பெஷலைத்தவிர 501 வாஷிங்ஸோப்பு ஒன்றும் உள்ளது. அதன் விலை இன்னும் குறைவு, நம் வீட்டில் எல்லா அவசியங்களுக்கும் தகுந்த ஸோப்பு. கியூபுகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும் சீவல்களாகவும் எல்லாப் பெரிய கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் வில்லைகளாக 3 சைஸ்களில் பெட்டிகளில் பாக் செய்து விற்கப் படுகிறது.



டாம்கோ விற்பனை இலாகா:
1, வாரன் ரோட், மீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

FS. 1948.

நாடோடிப் பாட்டு

(13-ம் பக்கத்தொடர்ச்சி)

ராமரே துணைவா;
ராகவரே தண்டம்
ரக்ஷிப்பதுன் பாரம்
இரண்டுடனே வாரீர்.

சைவ சமயமும் வைஷ்ணவமும் தனித்தனியே ஏற்றத்தில் போராடவில்லை. சிவனும் பெருமாளும் சேர்ந்து ஏற்றப் பாட்டில் பிரசன்னமாகிறார்கள். இன்னும் பார். ஏற்றக்காரனுடைய அபேத புத்தியைக் கண்டு 'சபாஷ்' போடப் போகிறாய். அவன் இப்போது ஜைனர் கோயிலுக்கு நம்மை இழுத்துப் போகிறான், பிரதட்சிணம் செய்யச் சொல்கிறான். அருகர் கோயிலை வலம் வந்தால் கோடி பலன் உண்டாம்; அதிக சம்பத்து உண்டாம்; நல்ல பலன் உண்டாம். ஒரே விஷயத்தை ஒரு தடவை அல்ல பத்துத் தடவை சொல்லிச் சொல்லி அதைப் பாட்டாக்குகிறான்: பாட்டென்று நீ நினைக்காவிட்டால் மந்திரமென்று நினைத்துக் கொள். மந்திரத்தைத் தானே பலமுறை உருவேற்ற வேண்டும்? பாட்டிலே பல்லவியும் ஜபத்திலே மூல மந்திரமும் திருப்பித் திருப்பிச் சொல்வதனால் அதிக இன்பமும் அதிக நன்மையும் அளிக்கின்றன. எங்கே? ஏற்றக்காரனைப் பின் தொடர்வோம்.

இனிஅருகர் கோயில்
வலம்வருவோம் வாங்க
பொன்னருகர் கோயில்
போய்வருவோம் வாங்க
கோவில்வலம் வந்தால்
கோடிபலன் உண்டு
அருகர்வலம் வந்தால்
அதிகசம்பத்துண்டு
நாதர்வலம் வந்தால்
நல்லபலன் உண்டு
ஸ்வாமிவலம் வந்தால்
சற்றுங்குறை வில்லை.

இந்தச் சமரஸம் அவனை முறைதெரியாமல் அடித்துவிடுகிறது. முருகனைப் புகழ்கிறான்; அடுத்த அடியிலேயே நாராயணனுக்கு நமஸ்காரம் பண்ணுகிறான். வள்ளியையும் முருகனையும் காட்டில் கொண்டு வந்து நிறுத்துகிறான். அப்படியே அவர்களை விட்டு விட்டு ராமரை அழைத்து வந்து இறங்குகிறான்.

முருகருக்கோ வள்ளி
மோகனப் பெண் ஆனாள்
கந்தருக்கோ வள்ளி
கானமயில் ஆனாள்
வேலருக்கோ வள்ளி
வேடிக்கைப்பெண் ஆனாள்
குமரருக்கோ வள்ளி
குடிவிளக்காய் நின்றாள்
வேடருக்கோ வள்ளி
வேங்கைமர மானாள்
குமரருக்கோ வள்ளி
கோன்னைமர மானாள்
நமோ நாராயணா
நாற்பதியா லோண்ணு

* * * *

ஆறுமுக வேலர்
குறக்குலம்போய்ச் சேர்ந்தார்
குறவன்மகள் வள்ளி
கூடாதேன்று சொன்னாள்
வேடன்மகள் வள்ளி
வேண்டாமென்று சொன்னாள்
குமரிவள்ளிக்காகக்
கோன்னைமர மானார்.
வேடர்வள்ளிக்காக
வேங்கைமர மானார்
வேங்கைமரம் வெட்ட
வேடரோடி வாரார்
பச்சைமரமென்று
பாவவினை சொன்னாள்
கோன்னைமரம் வெட்டக்
கூடாதென்று சொன்னாள்
ஏழைபோல ராமர்
இருந்தார் கானகத்தில்
இருந்தார் கானகத்தில்
எழுபதியா லோண்ணு

ஏற்றக்காரனுக்குப் பராசக்தியைக்கூடத் தெரிந்திருக்கிறதே! தேவி பாகவதமோ, யாமள தந்திரமோ அவன் அறிந்ததில்லை. அவனுக்குப் பராசக்தியின் ஒரு கோலம் நன்றாகத் தெரியும். மாரியாத்தாளே உலகம் முழுவதும் ஆளும் ஏக நாயகி என்று அவன் சொல்கிறான். ஈசுவரி உமை அவள் தான் என்கிறான். அவன் வருணிப்பதைக் கேள்;

உலகத்தாயி மாரி—அவள்
சதுரக்கூடைக் காரி
தாழனூராள் மாரி—அவள்
தங்கக்கூடைக் காரி
எங்கும்பரா சக்தி—அவள்
எல்லாம்ஆள ஒத்தி
ஆதிபரா சக்தி—அவள்
அங்காளம்மாள் தேவி
நெற்றிப்பச்சைக் காரி—அவள்
நெடுங்குண்ணத்து ஆயி
பொன்னுக்கூடைக் காரி-அவள்
புறப்பட்டாளே மாரி
தங்கப்பொட்டுக்காரி—அவள்
தனித்துவந்தாள் மாரி
ஈசுவரி உமையே—என்னை
ஈடேற்றக்கண் பாரும்.

நிறுத்து. நிறுத்து. இதென்ன! இந்தப் பித்துக்கொள்ளி பாரதி கூட இப்படித்தானே பாடி இருக்கிறார்; ஏற்றக்காரனுக்கு அவர் தம்பியா, அண்ணனா?

"உலகத்து நாயகியே—
எங்கள் முத்து மாரியம்மா
உன்பாதம் சரண்புகுந்தோம்—
எங்கள் முத்து மாரியம்மா"
(பாரதியார்)

எல்லாரும் சமரஸப் பாட்டுப் பாடுவதில் ஒருவராகவல்லவோ தோன்றுகிறார்கள்?

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S.M.) 42, ChurchgateSt., Fort, Bombay. Phone: 21343.

மதனமஞ்சரி மாத்திரைகள்.

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், காதுகேடுகள் முதலியவற்றை நீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/.
மதன மஞ்சரி பார்மஸி, 184, சைனா பஜார் ரோடு, மதராஸ்.
கோயமுத்தூர்: ஏஜண்டு, மூர்த்தி பிரதர்ஸ் 27?, சுக்ரவார் பேட்டை

"அவனுடைய பலம் எங்கிருந்து வருகிறது"

இதர ஸ்திரீகள் தன்னுடைய குழந்தையைப் பற்றி புகழ்ந்து பேசும்போது தாய்மார்களுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகிறது. தங்கள் குழந்தைகள் தேக ஆரோக்கியமாக இருக்க அவர்கள் எடுத்துக் கொள்ளும் சிரமம் மெச்சக்கூடியது. போதிய பலம் இல்லாத குழந்தைகள் சீக்கிரம் சக்தியை இழந்து ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

உங்களுடைய குழந்தைகளுக்கு விடமின் கூடினதும், போஷாக்கை அளிக்க வல்லதுமான ஆகாரத்தைக் கொடுப்பது அத்தியாவசியம். இந்த சமயத்தில்தான் விடமின் சேர்ந்த டால்டா நன்கு உதவுகிறது டால்டாவினால் ஆகாரத்திற்கு சேர்க்கப்படும் விடமினும், ரக்ஷண சக்தியும் தான் பலத்திற்கும், ஆரோக்யத்திற்கும் காரணம். குடும்பத்திலுள்ளவர்களுக்கு பலம் அவசியமாகையால் வேண்டிய ஆகாராதிகளை டால்டாவினால் சமையல் செய்யுங்கள். டால்டாவினால் செய்த உணவுகளை எல்லோரும் விரும்புவதும் தவிர அதிக ருசிகரமாகவும் இருக்கிறது.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது...

விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரத்தக்கது. உணவுகளை டால்டாவினால் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக சக்தி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினால் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.

விடமின் சேர்ந்த **டால்டா**
தாவர எண்ணையால் தயார் செய்யப் பட்டதென்று உத்திரவாத முள்ளது— சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM. 20-193 TM
THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

சென்றவார நிகழ்ச்சி

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பாய் மெயிலில் ஏறுகையில் அசம்பாவிதமான சம்பவமொன்று நிகழ்ந்தது. மெயில் ஸ்டேஷன் வந்து நின்றதும் தாம் ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி 2-வது வகுப்பு வண்டியில் தன் சாமான்களுடன் ஸ்ரீ ஆனே ஏறிக்கொண்டார். அவ்வண்டியில் ஏறியிருந்த நான்கு ஐரோப்பியர்கள் ஸ்ரீ ஆனே வண்டியில் ஏறும்பொழுது பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தனர். அவர் ஏறியதும் அவர்கள் அவ் வண்டிக்கு வந்து அவரது படுக்கையைத் தூக்கி வெளியிலே வீசியெறிந்து அவரையும் வண்டியிலிருந்துதள்ளிவிட்டார்கள்.

ரயில்வே அதிகாரிகள் சமயத்தில் வந்து அதிகக் கஷ்டம் ஏற்படாமல் தடுத்தனர், ஸ்ரீமான் ஆனேக்கு வேறு வண்டியில் இடம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது.

* * * *

காகிதக் கட்டுப்பாடு புதிய உத்தரவு

சர்க்கார் வர்த்தக இலாகாவுக்கும், இந்திய கிழக்கத்திய சமாச்சாரப் பத்திரிகைகள் சங்கம், இந்திய பத்திராசிரியர்கள் மகாநாடு, இந்திய தாய்மொழிப் பத்திரிகைகள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும் இடையே, காகிதச் செலவைக் குறைப்பதற்காக நடைபெற்ற விவாதத்தின் முடிவாகக் கொடுக்கப்பட்ட அநேக யோசனைகளின் படி, 1942-ம் வருட காகிதக் கட்டுப்பாட்டு உத்தரவில் சில முக்கியமான மாறுதல்களைக் கொண்டு வருவதென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனர். இது 1943-ம் வருட பிப்ரவரி 27-ந் தேதி சர்க்கார் விசேஷ அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

அதன்படி எல்லாவிதமான பத்திரிகைகளும் நிர்த்தாரண விலைப்படி பாதி அளவுக்கே பிரசுரிக்கப்பட வேண்டும். மேலும் ஒரே இடத்தில் விநியோகிப்பதற்காக ஒரு நாளைக்கு ஒரு பதிப்புக்குமேல் வெளியிடுவதும் இதனால் தடுக்கப்பட்டிருக்கிறது.

மத்ய சர்க்கார் முன் அனுமதி பெற்ற பிறகே வேறு பதிப்பைப் போட வேண்டும். 5% விற்பனையாகாத பிரதிகளை திருப்பிக் கொடுக்கலாமென்பதும் ரத்தாகி விட்டது. பிப்ரவரி 20-ந் தேதி அமுலில் இருந்த விளம்பர விகிதத்தை ஏப்ரல் முதல் 50% விகிதம் அதிகரிக்க உத்தரவாயிருக்கிறது.

* * * *

டாக்டர் தாமஸுக்குப் புதிய பதவி

சென்னை ஸர்வ கலாசாலை பொருளாதார ஆசிரியரான டாக்டர் பி. ஜே. தாமஸ் யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட வேண்டிய புனருத்தாரணக் கமிட்டியின் பொருளாதார ஆலோசகராக இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். டாக்டர் தாமஸ் டில்லிக்குப் போயிருக்கிறார்.

ஸ்டாண்டர்டு துணிக் கமிஷனர்

மத்தியக் கவர்ன்மெண்டு ஸ்டாண்டர்டு துணிக் கமிஷனராக மிஸ்டர் வெள்ளோடி ஐ. ஸி. எஸ். நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவரது தலைமைக் காரியாலயம் பம்பாயில் இருக்கும்.

எங்களுக்குமா அடையாளச் சீட்டு?

மற்ற பொது ஜனங்களைப் போல் சட்டசபை அங்கத்தினர்களும் ஸெக்ரிடேரியட், சட்டசபை முதலிய இடங்களுக்கு செல்வதற்கு அடையாள சீட்டுகள் வைத்துக்கொள்ள வேண்டுமா என்று சமீபத்தில் ஸிந்து சட்ட சபையில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. ஒவ்வொரு அங்கத்தினரையும் படம் பிடிக்க அப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதம மந்திரி பதிலளித்ததாவது:—கால நிலை மோசமாயிருக்கிறது. குண்டுகள் அருகிலேயே வீசப்படுகின்றன. ஒவ்வொரு அங்கத்தினரையும் பாதுகாக்க நாங்கள் முயலுகிறோம். இந்த அடையாள பில்லைகளுக்குப் பதிலாக அங்கத்தினர்களை நன்றாய்த் தெரிந்த அனுபவம் வாய்ந்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படலாம் என்று சிலர் யோசனை கூறினர். இவ்விஷயம் தற்காலிகமாக விட்டுவிடப்பட்டது.

புதிய மணி

சென்ற மாதம் 25-ந்தேதி மத்திய சட்ட சபையில் கேள்வி நேரத்தின்போது ஜனாப் காஸ்மியின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் ஸ்ரீ விஷ்ணு சாஹாய் பதில் சொன்னார். தற்சமயம் சர்க்கார், மாரி காலத்திற்குமட்டும், புதிய மணி முறையை அமுலிலிருக்க வேண்டுமென நிச்சயித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அஸ்ஸாமில் மீண்டும் ஜப்பானிய தாக்குதல்

பலமான ஜப்பானிய விமான கோஷ்டியொன்று சென்ற மாதம் 25-ந்தேதி காலை மீண்டும் அஸ்ஸாமிலுள்ள அமெரிக்க விமான தளத்தை தாக்கியதாக ஒரு அறிக்கை கூறுகிறது.

உபவாஸத்தின் போது விருந்தா?

ஐக்கிய மாகாண கவர்னர் ஸர் மாரிஸ் ஹாலெட்டைக் கௌரவிப்பதற்காக இந்திய சர்க்கார் ஸிவில் பாதுகாப்பு மெம்பர் ஸர் ஜ்வாலப் பிரஸாத் ஸ்ரீ வத்ஸவா சென்ற மாதம் 22-ந் தேதி இரவு ஒரு விருந்து நடத்தினர். காந்திஜி உபவாஸ மிருக்கும் பொழுது விருந்துண்பதை ஆதரிக்காது ஸர் ஸ்ரீ வத்ஸவாவின் மனைவியும், அவரது இரண்டு பெண்களும் மேற்படி விருந்தைப் பகிஷ்கரித்தனர்.

பொன்னேரி தாலூகாவைச் சேர்ந்த நாலூர் கிராமத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் நா. ஆ. வெ. ராஜாராம் நாயுடுவின் பத்தினியாரும், சென்னை சுதேசமித்திரன் ஆபீஸைச் சேர்ந்த ஸ்ரீமான் என். ஏ. ஆர். பாபு நாயுடுவின் தாயாருமாகிய ஸ்ரீமதி ராஜம்மாள் சென்ற (14-2-43) ஞாயிற்றுக் கிழமை பெரம்பூர் ஹைரோட்டிலுள்ள (மேட்டுப் பாளையத்தில்) காலமானார்.

சோப் விலைகள்

அடியிற்கண்ட பிரபல சோப்புகளுக்கும், மற்ற பொருள்களுக்கும் ரயில் வசதியுள்ளதும், அதிக சுங்க வரி சமஸ்தான வரிகள் வசூலிக்கப் படாததுமான இடங்களில், தற்காலத்தில் நியாயமாக கொடுக்கவேண்டிய விலைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

ஸன்லைட் சோப் ..	*பெரிய சைஸ் ..	3 அணா	
	சிறிய சைஸ் ..	2 ,,	
லைப்பாய் சோப் ..	*பெரிய சைஸ் ..	3½ ,,	
	சிறிய சைஸ் ..	2 ,,	
லக்ஸ் டாய்லெட் சோப்	பெரிய சைஸ் ..	4½ ,,	
	சிறிய சைஸ் ..	1½ ,,	
லைப்பாய் டாய்லெட் சோப் ...	பெரிய சைஸ் ..	4½ ,,	
	பெரிய பாக்கெட் ..	14 ,,	
லக்ஸ்	மத்திய சைஸ் ..	7 ,,	
	சிறிய பாக்கெட் ..	3½ ,,	
விம்	பெரிய டின் ..	12 அணா	
	மத்தியதர டின் ..	7 ,,	
"காஸேஜ் எம்ப்ரஸ்பேல்" சோப் ..	பார் 1-க்கு ..	7 ,,	
"காஸேஜ் அவுஸ் ஒயிப் 'பிரண்டு" சோப்	பார் 1-க்கு ..	1ரு. 1அ	
"காஸேஜ் வீல்" பார் ஸோப்	பார் 1-க்கு ..	12 அணா	

* இப்பொழுது ஸன்லைட் சோப்பும், லைப்பாய் சோப்பும் தனித்தனி கட்டிகளாக மெழுகு காகிதத்தில் சுற்றப்பட்டு, மேற்கண்ட விலைக்கு விற்கப்படுகின்றன. பழைய இரண்டு கட்டிகளடங்கிய பெட்டியிலும் கிடைக்கலாம், விலை: ஸன்லைட் அணா 6, லைப்பாய் அணா 7.

பொது ஜனங்களின் சௌகரியத்திற்காக பிரசுரிக்கப் படுகிறது.

லிவர் பிரதர்ஸ்
(இந்தியா) லிமிடெட்.

[குறிப்பு:—இந்த விளம்பரம் 8-2-1943 லிருந்து மறு பிரசுரம் வரை, அமுலுக்கு வரும்.]

L. Com. 24-178 TM. BOM.



இந்தியாவின் ஸேவைக்காக நமது இயந்திர வேலை நிபுணர்கள்

யுத்தமானது நமக்குவேண்டிய முக்கிய ஸாமான்களையும், இயந்திரங்களையும், இயந்திரங்களுக்கு வேண்டிய பாகங்களையும் அயல் நாடுகளிலிருந்து வருத்துவதை தடுத்துவிட்டது. ஆனால், நம் இயந்திரவேலை நிபுணர்கள் இவைகளைப்பற்றி முன்னமேயே திட்டம் பண்ணிவிட்டார்கள். அவர்கள் நமக்கு வேண்டிய ஸாமான்களுக்கு நம் நாட்டில் கிடைக்கும் ஸாதன பொருள்களை உபயோகப்படுத்த வழிகண்டு பிடித்து நம் தொழிற்சாலைகளிலேயே இயந்திரங்களையும் இதர கருவிகளையும் செய்து விட்டார்கள்.

ஆகையால் ஸமாதான காலங்களிலிருக்கும் எங்கள் ஸாமான்களின் உயர்தரத்தைக் குறைக்காமல் தேசத்திற்கு வேண்டிய ஸாமான்களை தயாரித்து கொடுப்பதும், நாட்டிலெங்கும் நம்முடைய ஸாமான்கள் யாதொரு தடங்கலின்றி கிடைக்கச் செய்வதுமே எங்களுடைய திடமான நோக்கம்.

நீங்கள் உங்களாலான உதவியை எங்களுக்குச் செய்யாவிடில் நாங்கள் எங்கள் கடமையை பூராக செய்ய முடியாது. ஏராளமான ஸாமான்கள் கிடைப்பதுடன் எங்கள் விற்பனையாட்கள் நாட்டிலுள்ள பெரிய வியாபாரிகளுக்கும், சிறிய வியாபாரிகளுக்கும் ஸாமான்களை ஸரிவர பங்கிடப்போவதாலும் நீங்கள் வேண்டியதற்கு மேல் வாங்கவேண்டியதில்லை.

ஸாமான்களை உபயோகிப்பவர்களின் நன்மைக்காக—டாடா ஆயில் மில்ஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது.

Dr. Paul's Pure Lotus Honey

The Infallible Medicine for Cataract Glaucoma, Ophthalmia, Ulcers of Eyes, and all other eye diseases. Acts like Magic. Money back in case of failure. Price Two Dram Phial Rs. 2. V. P. Extra.

S. PAUL & CO., (Dept. S. W.)
4, Hospital Street, Dharamtola, CALCUTTA

ஜுரத்தில்

உஷ்ணம் 102 டிக்ரிக்கு மேலே போனால், கூந்தல் உதிர்வது நிச்சயம். அம்மையானாலும் சரி, 'டைபாயிட்' 'மலேரியா' 'இன்புளுயன்ஸா' முதலிய விஷ ஜுரங்களானாலும்சரி, சூடு காரணமாகவே மயிர் அபரிமிதமாகக் கொட்டுகிறது. ஜுர ஸமயங்களில் உஷ்ணம் அதிகமாக ஏறுவிடினும், மயிர் உதிர்வதுமட்டும் தவறுவதேயில்லை. அப்படி உதிரும்போது தக்க சிகிச்சைசெய்து தடுக்காமலிருந்துவிட்டால், மயிர் விடாமல் உதிர்ந்து தலையும் வழுக்கையாய்விடும்.

வெள்ளம் வந்தபிறகு அணையிடுவதேன்? மயிர் உதிர ஆரம்பிக்கு முன்னரே, கூந்தலைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். ஜுரத்துக்குப் பிறகு கேசம் அரைப்பங்கு கால் பங்காகிக் குறைந்துவிட்டால், கேசவர்த்தினியைக் கொண்டு கேசத்தை விருத்திசெய்து பூரணமாக்கிக் கொள்ளுங்கள். கடைசியாக எல்லாப்பரீக்ஷைகளும் செய்தானபிறகு கேசவர்த்தினியே கூந்தலுக்குச்சிறந்தது என்று தெரிய வந்தால், கேசவர்த்தினியைமுதலிலேயே கைக்கொள்ளலாமே?

கேசவர்த்தினி

கூந்தலைகாப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3கேள்விகளுக்கு ரூ. 1. மேல்கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 'சந்திரிகை' எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

Dr: பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பகுளம் போஸ்டு.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி, உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.